# வெளிச்சம்

மார்ச் : 1995 விலை 20/=



விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்


- தமிழீழதேசியத்தலைவர்
- பிரம்மஞானி
- சொக்கன்
- அடேல் ஆன்
- விவேக்
- நா. யோகேந்திரநாதன்
- கோகிலா மகேந்திரன்
- கலாநிதி சண்முகநாதபிள்ளை
- ப. புஸ்பரட்ணம்
- தில்லைச்சிவன்
- நாமகள்
- இளந்திரையன்

சுவையோ -- சுவை

தமிழீழத்தில்.. தரமானதை என்றும் சுவையுங்கள்.

## ஸ்ரீ கண்ணா உற்பத்திகள்...

**COFFEE BITE**

**COOL MINT**

**PEANUTS**

பள்ளிச் சிறுவர் முதல் முதியோர் வரை
அனைவரும் வாங்கி சுவைப்பது

## ஸ்ரீ கண்ணா உற்பத்திகளே

தரம் நாடுவோர் அனைவரும் நாடுமிடம்

# ஸ்ரீ கண்ணா இன்டஸ்ரீஸ்

சோதிவேம்படி ஒழுங்கை
மானிப்பாய்.

ஜெணியான்


வெளிச்சம்

கலை, இலக்கிய சமுக இதழ்

● வெளியீடு:

விடுதலைப்புலிகள்
கலை, பண்பாட்டுக்கழகம்

● உருவாக்கம்:

ஆசிரியர் குழு

● ஓவியங்கள்:

தயா, கோபாலி

● அச்சு:

ம. மரியதாஸ்

● இதழமைப்பு:

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

தொடர்புகட்கு:

"வெளிச்சம்"
விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்
நடுவப்பணியகம்
கோண்டாவில்.
தமிழீழம்.


# தலைவாசல்


இதழ்: 34 மாசி: 1995


எறிகணையின் உயிர்முறிப்புக்கள் இன்று இல்லாமற் போய் விட்டன. குண்டு வீச்சு விமானங்களைக்கண்டு குடல்தெறிக்க ஓடும் அவலநிலை அற்றுப்போய்விட்டது. யுத்தத்தின் சத்தங்களற்ற இத்தினங்கள் நீடிக்க வேண்டும். துப்பாக்கிச் சன்னங்கள் உயிர்ப்பூவைக் கிள்ளியெடுக்கும் நிலை இனிமேல் எப்போதும் இல்லையென்று அடியற்று விழவேண்டும். சாந்தி, சமாதானம், உண்மையான தார்மீகம், சுதந்திரம், சுபீட்சம் என்பன வார்த்தைக்குரிய அர்த்தப் பொலிவுடன் இங்கே வாழ்க்கைநெறியாக வேண்டும்.

இன்று ஸ்ரீலங்காவிலும், தமிழீழத்திலும் எல்லோரும் சொல்லும் வார்த்தைகள் இவையாகி விட்டன. அனைவரினதும் நாட்டமும் இதுவான போதும், நடைமுறையென்பது எதிர்த்திசையில் தான் தொடர்ந்து நடக்கின்றது. இது அனைவரினதும் எதிர்பார்ப்பில் எழும் நன்னம்பிக்கையை இழக்கச் செய்வதுடன் மீண்டும் சண்டைக்கு வித்திட்டுவிடுமோ என்று எண்ணவும் தோன்றுகிறது.

இதுவரையும் ஸ்ரீலங்காவில் ஆட்சிபுரிந்த பிரதமர்களுக்கும், ஜனாதிபதிகளுக்கும் கிட்டாத வாய்ப்பு சந்திரிகா அம்மையாருக்கு எட்டியுள்ளது. இனப் பிரச்சனையை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துவையுங்கள் என்று சிங்கள மக்களே இவருக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளனர். விடுதலைப்புலிகளைப் பொறுத்த வரையிலும் சமாதானத்துக்கான சகல கதவுகளும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. சமாதானத்துக்கான நல்லெண்ணசமிக்ஞைகளும் பல தடவைகள் காட்டப்பட்டுள்ளன. தமிழ்மக்களின் அரசிறைமையும், குடிநிலங்களும் தன்மானத்துக்குத் தடையில்லாத வாழ்வும் இம்மண்ணில் ஏற்படுமானால்,.... அதற்கான வழி இரத்தம் சிந்தாமல் கிட்டு

மானால் அதனையும் பரிசீலிக்கத் தயாரென பலதடவைகள் புலிகள் அறிவித்துள்ளனர்.

மீண்டும் ஒருமுறை யுத்தம் எழக்கூடாது என்பதற்காகவும், விடுதலையை விற்று வாழ்ந்தார்கள் என்ற குற்றச்சாட்டை எதிர்காலம் சுமத்தக்கூடாது என்பதற்காகவும், இதற்கு மேல் இறங்க இடமில்லை என்றளவுக்கு இறங்கி, களக்கூத்தாடி கயிற்றில் நடப்பது போல மிகவும் அவதானமாக ஒவ்வொரு அடியையும் புலிகள் எடுத்துவைக்கின்றனர். புலிகளின் இந்த நிலைப்பாடு சமாதான விரும்பிகளுக்கு மகிழ்ச்சியையும், திருப்தியையும் கொடுத்திருக்கிறது.

இதற்கு மாறாக ஸ்ரீலங்கா அரசுப்பக்கமான சமாதான அறிகுறிகள் நம்பிக்கை தரக்கூடியதாக அமையவில்லை. பூநகரி இராணுவ முகாமை அகற்றுவது, எரிபொருளுக்கான தடையை நீக்குவது, இராணுவ கடல் வலயச் சட்டத்தை செயலிழக்கச் செய்வது, தென்தமிழீழத்தில் புலிவீரர் தமது பாதுகாப்புக்காக ஆயுதங்களுடன் சென்று, சமாதானப்பிரச்சாரம் செய்ய அனுமதிப்பது போன்ற குண்டுமணியளவான சின்னப் பிரச்சனைகளையே இணக்கம் கண்டு தீர்த்து வைத்து, தமிழ் மக்களின் நம்பிக்கையை பெற முடியாத அரசினால் சுய நிர்ணயம் பற்றியும், சிங்களவர்க்கும், தமிழர்க்கும் சமத்துவமான ஒரு அமைப்பை ஏற்படுத்துவது பற்றியும் பேசித்தீர்த்துக் கொள்வது என்பது எப்படிச் சாத்தியமாகப் போகிறது?

சின்னச் சின்னப் பிரச்சனைகளை இழுத்தடித்து ''பிகு'' பண்ணி காலத்தைக் கடத்தினால், பெரிய பிரச்சனைகள் பேச்சுக்கு வரும் போது தட்டிக் கழித்து விடலாம் என்ற உட்கருத்தை ஸ்ரீலங்கா அரசு கொண்டிருக்குமேயானால் ''மோதல் தவிர்ப்பை'' இன்னுமேன் நீடிக்க வேண்டும்? சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்றவற்றில் இருந்துவரும் உதவி கிட்டும்வரைதான் இந்த நாடகம் என்று யாராவது நினைத்தால் அந்த நினைப்பிலும் நியாயம் இருப்பதாகவே நமக்குப்படுகிறது. ''நாங்கள் பேச்சுக்கு தயாராக இருந்தோம். புலிகள்தான் குழப்பி விட்டார்கள் என்று அயல் நாட்டுக்கும், உலக நாடுகளுக்கும் சொல்ல ''ஒப்பனைக்கு இந்தப் பேச்சுவார்த்தை நாடகத்தை'' அரங்கேற்ற சிங்கள அரசு எண்ணுமேயானால் அதன் விபரீதத்தை காலம் நிச்சயம் காட்டும்.

எங்களைப் பொறுத்தவரையில் உலங்குவானூர்தி இறங்குவதற்கான 'எச்' வடிவிலான வெள்ளைக் கோடுகளை இன்னும் அழிக்கவில்லை என்பதிலிருந்து எம் சமாதான முயற்சிகளையும், முன்னெடுப்புக்களையும் ஸ்ரீலங்கா அரசு புரிந்து கொள்ளட்டும். நீட்டும் கரங்கள் நிலையான சமாதானத்துக்காக நீளட்டும்.

புலிகள் எவரையும் ஏமாற்றியதில்லை.

புலிகள் எவரிடத்திலும் ஏமாறியதும் இல்லை.

நிலம் இருண்டு கிடக்கிறதே
நிலவு எங்கே போனது?
மரங்களெல்லாம் மொட்டையாகிக் கிடக்கிறதே
பூக்களுக்கு இன்றென்ன கதவடைப்பு?
எறிகணைகள் வந்து வெடித்தபோது
இருந்த உறவும்
ஒருவருக் கொருவரான உசாவலும்
இன்றேன் இல்லாதழிந்தன.
அவரவர் வேலியடைக்கத் தொடங்கினர்.
உடைந்த ஓடுமாற்றக் கூரையேறினர்
'அன்ரனா' உயர்த்திக் கட்டி
அலைவரிசை தேடுகின்றனர்.
இதுதானா ''மீண்டும் தொடங்கும் மிடுக்கு?''
மேசையில் பேச உட்கார்ந்த உடனேயே
இப்படியென்றால்
விடுதலை கிட்டும் நாளில்
குயில்கூட கூடுகட்டத் தொடங்கிவிடுமா?
எனக்கு நீ, உனக்கு நானென்ற
உறவு நூலிழை உக்கி அறுந்துபடுமா?
வீதிசுற்றிய தேர் இருப்பிடம் வருமுன்னர்
மேற்கு வீதியில் வைத்து
இழுத்த வடத்தை கைவிட்டு
சுவாமியை இறக்குவதை
சுதந்திரம் என்பதா?
கால்கள் கொஞ்சம் களைப்பாறுகின்றன.
அதற்காகப் பயணம் முடிந்துவிட்டதென்றா
அர்த்தம் கொள்வது?
ஏனிந்த மௌனம்
எவராயினும் வாய்திறந்து பேசுங்களேன்.

— மாலிகா —



# சத்தியம் என்றும் சாவதில்லை அது வரலாற்றின் ஆன்மா

எமது விடுதலை இயக்கத்தின் அதிகார பூர்வ வானொலியான 'புலிகளின் குரல்' இன்றுடன் தனது நான்காவது ஆண்டு சேவையை நிறைவு செய்கிறது. இரண்டாம் கட்ட தமிழீழப்போர் தொடங்கியதை அடுத்து ஆரம்பமான எமது வானொலி, யுத்தசூழலால் எழுந்த நெருக்கடிகளுக்கும் சவால்களுக்கும் ஈடுகொடுத்து பிரமாதமான முறையில் பெருவளர்ச்சி கண்டிருக்கிறது. விடாமுயற்சியாலும் கடின உழைப்பாலும் ஈட்டப்பட்ட இந்தசாதனை பாராட்டுக்குரியது.



தமிழீழத் தேசியத் தலைவர்
**திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

உன்னதமான இலட்சியப் பாதையில் முன்னேறிச் செல்லும் எமது விடுதலைப் போராட்டத்தை களங்கப்படுத்தும் நோக்குடன் பல்வேறு சக்திகள் செயற்பட்டு வருகின்றன. நீண்ட காலமாகவே, இந்த சக்திகள் எமது போராட்டத்திற்கு எதிராக, திட்டமிட்ட ஒரு பிரச்சாரயுத்தத்தை நடத்தி வருகின்றன. உண்மைகளை மறைத்து, பொய்களை திரித்து, விசமத்தனமான பிரச்சாரத்தை செய்துவருகின்றன. மக்களின்விடுதலை உணர்வைமழுங்கடித்து, மக்களை குழப்பித் திசைதிருப்பி போராட்டத்தை நசுக்கிவிடும் நாசகார நோக்கில் இந்தப்பிரச்சாரப்போர் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது.

பொய்மையையே பிரதான ஆயுதமாகக்கொண்டு எமது போராட்டத்திற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட இந்தக் கருத்துப் போரை முறியடிக்க நாம் உண்மையை ஆயுதமாக ஏந்தினோம். இந்த உண்மையின் குரலாகவே 'புலிகளின் குரல்' ஒலித்துக் கொண்டிருக்கிறது.

பொய்களுக்கு ஆயுள் குறைவு. அவை வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் சென்று விடுகின்றன. ஆனால் சத்தியம் என்றும் சாவதில்லை. அது வரலாற்றின் ஆன்மாவாக என்றும் நிலைத்து நிற்கும்.

ஒரு விடுதலைப்போராட்ட சூழலில் மக்கள் தொடர்பு சாதனங்களின் பங்கு முக்கியமானது. இவை மக்களுக்கு உண்மை நிலைமையை எடுத்துச்சொல்ல வேண்டும். உண்மையான விளக்கங்களைக் கொடுக்க வேண்டும். உண்மையையும், நேர்மையையும் தார்மீகநெறியாகக்கொள்ளவேண்டும். உண்மையைத் தாங்கிவரும் கருத்துக்களே

மக்களை கவர்ந்துகொள்கிறது. மக்களை விழிப்புணர்வு கொள்ளச்செய்கிறது.

எமது விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலையை, செய்தித்தொகுப்பாக, கருத்துத் தொகுப்பாக, கலைவடிவமாக, மக்களுக்கு எடுத்துக்கூறி எமது வானொலை மக்களின் நல்லெண்ணத்தைப்பெற்று வருவதைக்காண நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். 'புலிகளின் குரல்' வானொலையின் அபாரமான வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அயராது உழைத்துவரும் நிர்வாகப் பொறுப்பாளர்களுக்கும், கலைஞர்களுக்கும், ஏனையோருக்கும் எனது பாராட்டுக்கள்.

'புலிகளின் குரல்' தனது பணிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க எனது நல்லாசிகள். ☐☐

('புலிகளின் குரல்' நான்காவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு, தலைவர் அவர்கள் வெளியிட்ட செய்தி.)


பலகாரம் செய்ய
பதமான மா வேணும்
சுவையான கறி சமைக்க
தரமான தூள் வேணும்

**தரமான செயல் திட்டம் கொண்டவர்கள் நாங்கள்!**

தானியங்கள்
மிளகாய்
நெல், அரிசி அனைத்தும்
தரமாக பதம் செய்து கொடுக்கிறோம்.
யாவும் விற்பனை செய்கிறோம்.

அனைத்துக்கும்

**நியூ சாந்தி**

**அரைக்கும் ஆலை**

தெல்லிப்பளை வீதி, சங்கரத்தை
வட்டுக்கோட்டை.




# முறைப்பாடு

□ தில்லைச்சிவன் □

"அன்றிலங்கை ராணுவம் தீவகத்
தணிவகுத்து நெடுக நடந்தது,
குண்டுவானத் திருந்து பொழிவதும்
கூடியோடும் மக்கள்மேற் சுடுவதும்
கண்டவேலிகள் குடிசைகள் கொட்டில்கள்
கனல்தனுக் கிரை யாக்குவ தாயவர்
சென்ற போதினில் ஆங்கொரு பற்றையுள்
செயல்மறந்து பதுங்கிக் கிடந்தனா!

கொண்டு வந்தொரு குமரியை வீசினர்
குமர்தவழ்ந்துமுன் பற்றையுள் மறையவும்
கண்ட பேயொன்று ஓடிச்சென் றவளது
கரத்தைப் பற்றிக் கந்தலை எடுத்தது,
மண்டு கோரத்தைக் கண்டுஉள் நெஞ்செலாம்
மரணவாதை எடுத்து வியர்க்கவும்,
அண்டர்நா யகனைநினைந் தபயமென்
றடைக் கலந்தரச் கேட்டநான் இங்கொன்று;

சொல்வ தெங்ஙணம் சோதனை கண்டுளம்
துடித்து ஏங்கி என்னவோ செய்தது,
வெல்லும்வாறுண்டோ? நெஞ்சு வெடித்தீடும்
வேதனையொலி அவன்செவிப் புகுமெனில்
என்னவாகும் என்கதி? "இவளுடன்
இந்தக் காட்டினுள் பற்றையுள் ஈருடல்
புல்லும்வாறு கிடந்தன" எனக்கதை
போகும் கேட்டவர் புகுங்குவர், கேவலம்.

'ஆணென' எனைச் சொல்லவும் நாணுவேன்,
அவளின் நல்லுயிர் காத்திடஎன்றனால்
ஏலும், அங்கவன் துப்பாக்கி நிலத்தினில்
இடறி என்னயல் வந்து கிடந்தது,
ஆயினேனோ தொட்டிலேன், அதனைநான்
அன்று கையாளும் வகையறி யாமையும்
வீரர்கள்வேறு நின்றதும் அஞ்சியோர்
வினையுமின்றி வெறுங்கூடு காவினேன்.

● ●

என்றனுக்குஇம் முறைப்பாடு செய்தவோர்
இளைஞன்பே யறைந்தவனென ஏகினான்,
சென்றவன் அவன் உணர்வினை என்மனம்
சிந்தை கொண்டதும் சிலிர்த்த துடலமே
அந்த நல்ல இளைஞனை ஒருமுறை
அங்கோர் வீதியிற் பார்த்ததும் வாழ்த்தினேன்
சிந்தும் வீரமும் ஆண்மையும் புலியுடை
சேர்க்கத் துப்பாக்கி தூக்கிமுன் சென்றனன்.

□□

கண்ணைக் கவரும் அழகில்
மின்மினி எழுத்துக்கள்

● பாடசாலைச் சின்னம் ஓவிய வேலைகள்
● சாவிக் கோர்வை

மூன்று மொழிகளிலும் யாவும்
செய்து கொள்ளலாம்.

றபர்சீல்கள், பிளாஸ்ரிக் பெயர், விளம்பர ஓவியம்
எதுவானாலும் நாடுங்கள்

வீமா

றப்பர் மாடம்
234, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

இன்று நாடு முழுதும்
உச்சரிக்கும் பெயர்

**மணலாறு கச்சான் அல்வா**

இன்று குழந்தைகள் பிடிவாதம் போக்குவது

**மணலாறு கச்சான் அல்வா**

இவற்றுடன்

**ரொபி, சொக்கலேற், இனிப்பு**

**வகைகள்**

அனைத்து - உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள்.

# பாரதி கைத்தொழில் நிறுவனம்

இல- 19, சம்பியன் லேன், கொக்குவில்.

**சுவையும் சுத்தமும் ஒன்றாய் அமைந்தது**

மணலாறு கச்சான் அல்வா

# சிறை மீட்பு

**விவேக்**

குமாரசாமியின் வீடு மூன்று மாதங்களாக செத்த வீடு மாதிரி இருந்தது. அவனது மனைவி சரியாக சாப்பிடுவது கூட இல்லை. இந்த மூன்று மாதத்தில் உடல் மெலிந்து வருத்தக்காரி போல் ஆகிவிட்டாள். ஒவ்வொரு நாளும் அழுகை தான்.

இரண்டு நாட்களுக்கொருமுறை என குமாரசாமி புளியங்குளம் இராணுவ முகாமுக்கு போய் வருவது ஒரு தொழிலாகிவிட்டது. ஆனால் எந்தப் பலனும் இல்லை.

ஒருநாள் நானும் குமாரசாமியுடன் புளியங்குளத்திற்கு புறப்பட்டேன். யாரையாவது பிடித்து முடிந்த வரை கதைத்துப் பார்க்கலாம் என்பது எனது எண்ணம்.

பஸ்சிலிருந்து இறங்கியதுமே பழுதான நெய் மணப்பது போல் ஒன்று மூக்கைத்துளைத்தது. மனதிற்குள் பயத்தை உண்டு பண்ணியது. ஒரு தேனீர்க் கடைக்குள் போய் 'பிளேன்ரீ' அருந்தினோம். அந்த முகாமின் நடைமுறைகளை முதலில் இந்தத் தேனீர்க் கடைக்காரனிடம் விசாரித்து அறிந்து கொள்வது நல்லது என எனக்குத் தோன்றியது.



குமாரசாமியின் இரண்டாவது மகன் கொழும்பில் படிப்பிப்பதையும், விடுமுறைக்கு வீடு வரும் வழியில் புளியங்குளம் முகாமில் பிடித்து வைக்கப்பட்டதையும், மூன்று மாதங்களாகியும் விடுவிக்கப்படாததையும் ஒன்றுவிடாமல் கடைக்காரனிடம் கூறினேன்.

எம்மை கொஞ்சநேரம் கடையில் அமர்ந்திருக்கும்படி கடைக்காரன் சொன்னான். பின்னர் பீடி வாங்க வந்த இந்தியச் சிப்பாய் ஒருவனிடம் விடயத்தைக்கூறி எம்மை அறிமுகப்படுத்தினான். அந்த சிப்பாய் ஒரு தமிழன். எம்மை பரிதாபமாகப் பார்த்தான்.

''நாங்க என்னய்யா செய்யிறது. தமிழர் ரெண்டு மூணுபேர் தான் இங்கே இருக்கோம். எல்லோரும் இந்திக்காரனும், சீக்கியனும்தான். நீங்க பேசுறது அவனுக்குப் புரியாது. அவன் பேசுறது உங்களுக்குப் புரியாது. என்ன பண்ணப்போறீங்க........?''

எம்மைக் கேள்விக் குறியோடு பார்த்தான் அந்த சிப்பாய்.

''ஐயா நாங்களும் தமிழர். நீங்களும் தமிழன். மகனை ஒருக்கா பாக்கிறதுக்கு எண்டாலும் உதவி செய்யுங்கோ'' குமாரசாமி அழும் குரலில் வேண்டினான்.

''நான் ஒண்ணும் செய்ய முடியாதுங்க. எல்லாம் உங்க ஆளுக செய்யிறவேல. ஆ........ அங்க பாருங்க முன்னாடி ஒரு 'சென்றி' தெரியுதே. அங்க உங்க ஆளு ஒருத்தன்தான் முகமூடி போட்டுக்கிட்டு, பஸ்சில் வாறவங்க போறவங்க

எல்லாரையும் காட்டிக் குடுக்கிறான். தா ளி'' கெட்டவார்த்தை போன்ற ஒன்றால் அவனைத் திட்டி னான் அந்தச் சிப்பாய்.

சிறிது நேரம் யோசித்த அந்த சிப்பாய், பெயர் விலாசத்தைத் தரும்படியும் தாம் ஆளைப் பார்த்து விட்டு என்னநிலையில் இருக்கிறான் என்பதை யாவது கூறுவதாகச் சொன்னான். அடுத்த நாள் வந்து இதே தேனீர்க் கடையில் நிற்கும் படியும் கூறினான்.

பஸ்ஸில் திரும்புகையில் குமாரசாமியின் முகத்தில் சிறிது அமைதி தெரிந்தது. மகன் பிடிபட்டு மூன்று மாதங்களாகியும் பார்க்கக் கூட அனுமதிக்கப்பட வில்லை. அந்த சிப்பாய் பார்த்துக் கூறுவதாகச் சொன்னது குமாரசாமிக்கு சிறிது நிம்மதியைத் தந் திருக்க வேண்டும்.

அடுத்தநாள் மீண்டும் புளியங்குளத்திற்கு வந் தோம். அதே தேனீர்க் கடையில் 'பிளேன்ரி' அருந்தினோம். சிறிது நேரம் காத்திருக்க அந்த சிப்பாய் வந்தான்.

''ஏன்யா பையன் ஸ்கூல் மாஸ்ரர்னு சொன் னீங்க. அவன் எல். ரீ. ரீ. என்று வாக்கு மூலம் எழுதி கொடுத்திருக்கான்.''

''ஐயோ எண்டதா யாணை சத்தியமா, அவன் கொழும்பில் படிப்பிச்சுக் கொண்டிருந்தவன். போன ரெண்டு லீவுக்கும் வர வேண்டாம் எண்டு கடிதம் எழுதினான். இந்த லீவுக்கு தாயைப் பார்க்க வேணு மெண்டு வந்தவன். பொய் யெண்டால் இதைப் பாருங்கோ'' 'பாக்' கில் இருந்து ஏதோ பத்திரங் கள் கடிதங்களை எல்லாம் எடுத்து அந்த சிப்பாயிடம் காட்டினான் குமாரசாமி

நன்றாக அடித்து சித் திரவதை செய்திருப்பார் கள். அதனால் தான் அவன் அப்படி வாக்கு மூலம் கொடுத்திருக்கிறான் என்று எனக்குவிளங்கியது.

''இதைவிட நான் ஒன்றும் செய்ய முடியாது. பெரியவனோடப் பேசிப் பாருங்க.''

''இங்கிலீஸ் தெரிஞ்ச யாரையாவதுகூட்டிக்கிட்டு வந்து பேசுங்க'' என்று சொல்லிவிட்டு அந்த சிப் பாய் அவசரமாக அவ் விடத்தை விட்டு அகன் றான்.

குமாரசாமி கண் களைத் துடைத்துக் கொண்டு என்னைப் பார்த் தான். எனக்கு ஒரு யோசனை தலைக்குள் பளிச்சிட்டது. கிளிநொச்சி குளத்தடி முகாமில் தமி ழன் ஒருவன் பெரியவனாக இருப்பதாக பலர் சொல் லக் கேட்டிருக்கிறேன். அவனுடன் தொடர்பு கொண்டு அவனூடாக முயற்சித்தால்சரிவருமோ? எதற்கும் முயன்று பார்க் கலாம் என்று தோன்றியது. என்ன இருந்தாலும் தமி ழனுக்கு ஒரு பற்றுணர்வு இருக்கும், அந்த புளியங் குள சிப்பாய் போன்று. எனது யோசனையை குமாரசாமியும் ஏற்றுக் கொண்டான்.

அடுத்தநாள் கிளி நொச்சி 'சிட்டிசன் கொமிட்டி' ஆள் ஒருவரி டம் விசாரித்தேன். குளத் தடி முகாமிலுள்ள பெரிய வனின் பெயர் மேஜர் நடராஜா என்று அறிந்து கொண்டேன். ஆனால் அவன் எப்படியான ஆள் என்பதை அறியமுடிய வில்லை. 'சிட்டிசன் கொமிட்டி'க் காரரின் உதவியுடன் மேஜர் நட ராஜாவைச் சந்திக்கவும் ஏற்பாடு செய்து கொண் டேன். பார்ப்போம். தமி ழன்தானே, ஏதும் உதவு வான் என்று எனக்குள் எண்ணிக் கொண்டேன்.

ஓர் வெள்ளியன்று காலை நான், குமாரசாமி, அவனது மனைவி மூவரும் முகாமுக்குச் சென்றோம். ஒரு மணித்தியால காத்தி ருப்பின் பின் மேஜர் நட ராஜாவை சந்திக்க முடிந் தது. புளியங்குளத்தில் சந் தித்த தமிழ் சிப்பாயின்

முகத்தில் தெரிந்த இளகிய தன்மை மேஜர் நடராஜா வின் முகத்தில் தெரிய வில்லை. சற்று இறுக்க மான முகமாகவே தோன் றியது.

''என்ன வேணும்'' மேஜர் கேட்டான்.

குமாரசாமியும் அவ னது மனைவியும் பதற்றத் தில் ஒருவர் முகத்தை ஒரு வர் பார்த்துக் கொள்ள ஒரு முன்னுரையாக நான் தொடங்கினேன்.

''இவர் பெயர் குமார சாமி. இவரின்ர மகன் கொழும்பிலை 'ரீச்' பண்ணு றார். லீவுக்கு கிளிநொச் சிக்கு வாறவழியிலை புளி யங்குளத்து ஆமி க்காம்பில் பிடிச்சுப் போட்டினம். அவன் ஒண்டிலையும் தொடர்பு இல்லை. அஞ்சு வரிசமா கொழும்பில் தான் வேலை. நாங்க புளியங் குளத்தில் போய் கதைச்சம் அவைக்கு தமிழ் தெரியா தா... ''

மேஜர் நடராஜா இடை யில் குறுக்கிட்டான். ''ஆமா நீங்க யாரு''

''நான் இவரோட சினேகிதன்''

''ஏன் இவங்களுக்குப் பேசவராதோ''

''இல்லை.... ''

''நீருஇடையில என்ன ... புறோக்கர் வேலையா பார்க்கிறீரு?''

''இல்லை... வந்து ''

''யோவ் நீ பேசாம இரு. அவங்க சொல்லட் டும்''

எனக்கு சங்கடமாகப் போய்விட்டது. நான் முத லில் கதைக்கத் தொடங் கியது தவறு போலவே பட் டது. பேசாமல் தலையைக் குனிந்து கொண்டேன்.

குமாரசாமியும் அவரது மனைவியும் நடந்த விடயங் களைச் சொன்னார்கள்.

எல்லாவற்றையும் கேட்ட் மேஜர் நடராஜா ஒரு விசமப் புன்னகை செய்தான். தொண்டை யைச் செருமிக் கொண்டு பின் பேசத் தொடங்கி னான்.

''நீங்கஎல்லாரும்தான் எல். ரீ. ரீ. யை சாப்பாடு போட்டு வளர்க்கறீங்க. எல்லாரையும்தான் தண் டிக்கணும். ஒவ்வொருத்த னும் பல பேர்ல உலாவு றான். வீட்ல ஒரு பேரு. றோட்ல ஒரு பேரு. காட்ல ஒரு பேரு. ஒவ்வொருத்த னுக்கும் ஒம்பது பேர் இருக்கு. குறிப்பா எவனை யும் எங்களுக்கு புடிக்க முடி யாம இருக்கு. முழிச்சிக் கிட்டு இருக்கப்போவே கண்ணுல மண்ணத் தூவு றான். திடீர்னு வந்து சுட் டுட்டு ஓடுறான் முந்தா நாள் * 'திறீஸ்டார்' காரங் க நாலு பேரை வந்து சுட் டுட்டு போனான். போன வாரம் எங்க ஆமி இரண்டு பேரை உள்ள புகுந்து சுட் டாங்க. இவங்களை எல் லாம் சும்மா விட முடி யாது. அம்பது பேரை புடிச்சா அதுல அஞ்சு பேராவது எல். ரீ. ரீ இருப் பான். அதைத் தான் நாங்க செய்யப்போறோம். இப்ப புளியங்குளத்தில் அதைத் தான் ஆரம்பிச் சிருக்கோம்.''

அவன் கதைக்கும் போது அவனது முகம் சிவந்து ஆவேசம் கூடிக் கொண்டு போனது. அவன் தொடர்ந்தான்.

''ஸ்கூல் மாஸ்டர்னா எல். ரீ. ரீ இல்லைன்னு எங் களை நம்பச் சொல்றியா. எங்களுக்கு எல்லாம் தெரி யும்.

ஆமா விக்கியைத் தெரி யுமா .........விக்கி?''

எனக்கு இவனை ஏன் சந்திக்க வந்தோம் என் றாகிவிட்டது. அவன் பேசப்பேச பயம் அதிகரித் தது.

''சொல்லுங்கய்யா விக்கியைத் தெரியாதா

* *E. N. D. L. F.* இயக்கத்தை 'திறீஸ்ரார்' என்றே இந்திய இராணுவத்தினர் அழைப்பது வழக்கம்

யோவ் நீ சொல்லுய்யா உனக்குத் தெரியாதா?''

என்னைப் பார்த்து அவன் கேட்டான். நான் விக்கியைத் தெரியாது என்று சொன்னால் அவன் நம்ப மாட்டான். ஊரில் சின்னக் குழந்தைக்கும் விக்கியின் பெயர் தெரியும். நகரில் அடிக்கடி ஊடுருவி தாக்குதல் செய்து விட்டு மறைவது'விக்கியின்குறூப்' என்று இங்கு பலருக்குத் தெரியும். சில வேளை தன்னந் தனியாக வந்தும் தாக்குதல் செய்வான் விக்கி. அப்பகுதியில் இந்தியப் படையினருக்கு விக்கியின் பெயர் சிம்ம சொப்பனமாக இருந்தது.

மேஜர் நடராஜா ஆவேசத்துடன் முகத்தைச் சுருக்கி விரித்துப் பேசிக் கொண்டிருந்த விதம் எம்மைப் பயமுறுத்தியது. சட்டிக்குள்ளிருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாக எமது நிலைமை இருந்தது. நாம் அவனிடம் வந்த நோக்கம் வேறு. அவன் எம்மிடம் கதைத்துக் கொண்டிருந்த விடயம் வேறாகப் போய்விட்டது. மேஜர் விடவில்லை. தொடர்ந்து துப்பாக்கி மாதிரி வார்த்தைகளைப் பொழிந்தான்.

''எல். ரீ. ரீக்கு யாரு சாப்பாடு குடுக்கிறது, வீட்டுல தங்க வைக்கிறது. தகவல் சொல்றது எல்லாம் எங்களுக்குத் தெரியும். ஸ்கந்தபுரத்தில் தபால் ஒபீசுலே வேலை செய்யிற நாராயணனைத் தெரியுமாய்யாஉனக்கு. அவன் வீட்டில தான் இந்த விக்கிப்பய தங்கிறது. சாப்பிடுறது எல்லாம். முதல்ல அவனைப் புடிக்கணும். புடிச்சி நாயைச்சுடுறமாதிரி சுட்டுத் தள்ளணும். அப்பத் தான் நீ எல்லாம் திருந்துவ. பாரு. பாத்துக் கிட்டே இரு. இன்னும் ஒரு வாரத்தில் அந்த விக்கியை நாங்க புடிப்போம். புடிச்சி நாய் மாதிரி தெருத் தெருவா இழுப்போம். அவனை மட்டுமில்லை சாப்பாடு போடுற அத்தனைப் பேரையும் புடிச்சு சுட்டுத் தள்ளுவோம்.''

அவன் பேசிக் கொண்டிருக்க சிப்பாய்கள் பலர் எங்களைக் கடந்து வரிசையாக ஓடினார்கள். முன்னால் நின்ற 'ரக்' குகளில் பாய்ந்து ஏறினார்கள்.

''பாரு. இவங்க எல்லாம் இன்னிக்கு விக்கியைப் புடிக்கத்தான் போறாங்க. எப்படியும் புடிச்சிடுவாங்க. போங்காய்யா ஓடுங்க. ஒருத்தனும் இந்தப் பக்கம் வரக் கூடாது. ஸ்கூல் மாஸ்டர் மட்டுமில்லை. எவனையும் நாங்க நம்ப மாட்டம். எல்லோரும் ஒண்ணு தான். போங்க போங்க''

அவன் எங்களை விரட்டுவது போலிருந்தது. பயத்துடன் அசடுவழியமுகாமை விட்டு திரும்பினோம். சிறைச்சாலையிலிருந்து விடுபட்டதைப் போன்ற உணர்வு. மூவரும் ஒருவரோடொருவர் கதைத்துக் கொள்ளாமல் நடந்தோம். குளத்தடி வீதியைக் கடந்து கண்டி வீதியால் திரும்பி நடந்தோம். இந்தியச் சிப்பாய்கள்வரிசையாக நடந்து போய்க்கொண்டிருந்தனர்.

'டிப்போச்சந்தி' யால் திரும்பி கனகபுரம் வீதியில் நடந்தபோது சைக்கிளில் வாழைக்குலை கட்டிக் கொண்டு முன்னால் ஒரு பசளை 'பாக்' கில் ஏதோ சுற்றிக் கட்டிக் கொண்டு ஒருவன் எம்மைக் கடந்து நகருக்குள் சென்று கொண்டிருந்தான். உடம்பில் சட்டை இல்லை. தலையில் தலைப்பாகை. அந்த முகத்தை எங்கோ பார்த்த ஞாபகம் எனக்கு வந்தது. தலைக்குள் திடீரென்று மின்னல் வெட்டியது. அது விக்கியின் முகம் போலவே இருந்தது. விக்கி தானோ? இவ்வாறான வேடத்தில்தான் . விக்கி நகருக்குள் புகுந்து தாக்குதல் நடத்துவதாக ஊரில் பலர் பேசிக் கொள்கிறார்கள். அப்படியென்றால் அது விக்கிதானா......?

'இந்தமண்ணே சிறைக் கூடமாகிவிட்டது. இதனை மீட்க விக்கிகளால் மட்டும் தான் முடியும்' மனதிற்குள் கூறிக்கொண்டே வேகமாக எட்டி நடந்தேன். விடயம் புரியாமல் குமாரசாமியும் அவனது மனைவியும் ஓட்டமும் நடையுமாக என்னோடு தொடர்ந்தார்கள். காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு நடந்தேன். சில சமயம் வெடிச்சத்தங்கள் எதுவும் கேட்கலாம். □□

'ஈழத்தமிழர் வரலாறு' என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் திரு. ப. புஷ்பரட்ணம் அவர்கள் எழுதும் கட்டுரை வெளிச்சம் இதழில் தொடராக வருகிறது. இந்தத் தொடரின் முதலாவது பகுதியின் தொடர்ச்சி இந்த இதழில் பிரசுரமாகிறது.

# ஈழத்தமிழர் வரலாறு

## 2

ப.புஷ்பரட்ணம்

### ஆங்கிலேயர் ஆட்சியில்வரலாறு

19ஆம் நூற்றாண்டில் சிறப்பாக ஆங்கிலேயர் ஆட்சியில் இலக்கியங்களோடு தொல்பொருட்சான்றுகளையும் பயன்படுத்தி வரலாறு எழுதும் மரபு ஆசியாவில் தோற்றம் பெறத்தொடங்கியது. இந்தியாவில் வரலாற்றுப்பழமை வாய்ந்த கல்வெட்டுக்கள், கட்டிட அழிபாடுகள் என்பவற்றை அவதானித்த ஆங்கிலநாட்டு அறிஞர்கள், அதன் பெருமைகளைஆராய்வதில் அக்கறை காட்டத்தொடங்கினர். இவ்வறிஞர்களில் பலர் ஐரோப்பிய மொழிகளுக்கும் வட இந்திய மொழிகளுக்கும் இடையிலான ஒற்றுமையை ஆராய்வதில் புலமைபெற்றிருந்தனர். இது இந்திய வரலாற்றை ஆராய்வதற்கு உதவியபோதும் அதனால் பக்கச் சார்பான வரலாறே தோன்றியது. இதற்கு காரணம் வடமொழி கல்வெட்டுகளை ஆராய்ந்து வரலாற்றை எழுதிய அளவிற்கு ஆங்கில அறிஞர்கள் தென்னிந்திய மொழிக் கல்வெட்டுக்களை ,இலக்கியங்களை வாசித்து அவற்றை ஆராயும் புலமையைப் பெற்றிருக்கவில்லை. இதனால் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வெளியான இந்தியவரலாற்று நூல்களில் இன்று இந்திய நாகரீகத்தின் தொட்டில் என அழைக்கப்படும் தென்னிந்தியா, குறிப்பாக தமிழ்நாடு சிறு அத்தியாயத்தில் ஒரு முன்னுரையாக இடம்பெற்றது. இத்தகைய ஒரு அணுகுமுறை இலங்கை வரலாற்றிலும் காணப்பட்டது. இதற்கு வட இந்திய மொழிகளுக்கும் இலங்கையில் தோன்றிய பாளி சிங்கள இலக்கியங்கள், கல்வெட்டுகள் என்பவற்றிற்கும் இடையே மொழிரீதியான ஒற்றுமை காணப்பட்டது ஒரு காரணமாகும். இந்த ஒற்றுமையை ஆராய்ந்த அறிஞர்கள் பாளி இலக்கியங்கள் கூறும் வரலாற்றுக்கு விளக்கம் கொடுப்பதில் கூடிய கவனமெடுத்தனர். இதனால் மகாவம்சம் கூறும் வரலாறு மீண்டும் புத்துயிர் பெறத்தொடங்கியது. இவர்கள் ஆட்சியில் சில தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கல்வெட்டுக்கள், புராதன கட்டிட அழிபாடுகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால்இந்தஆய்வுகளில்

பெரும்பாலானவை மகாவம்சம் கூறும் புராதன சிங்கள இராசதானிகள் அமைந்த அநுராதபுரம், பொலநறுவை போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டன. அங்கும் கூட பௌத்த கலாசாரங்களை ஆராய்வதில் அக்கறை காட்டிய அளவிற்கு பிற கலாசாரச் சின்னங்களை ஆராய்வதில் அக்கறை காட்டவில்லை.

இத்தகைய ஒரு குறைபாடு ஆங்கிலேயர் ஆட்சிக்கால வரலாற்றாய்வில் காணப்பட்டாலும் முற்பட்டகாலங்களை விட ஓரளவுக்கு தமிழர் பிராந்தியம் பொறுத்து கவனம் செலுத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவற்றுள் வன்னி (1909, 1917) மன்னார் (1888) கந்தரோடை (1885, 1917) ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை. இவ்வாய்வுகள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு 'புராதன இலங்கை' என்ற நூலை எழுதிய பாக்கர், மகாவம்சத்தில் மறைக்கப்பட்டுள்ள எல்லாள மன்னனின் சாதனைகளுக்குரிய தொல்லியற் சான்றுகள் வன்னியில் இருப்பதாகக் குறிப்பிட்டார். மகாவம்சத்தில் வரும் பெலிவாவியை தற்போதைய வவுனிக்குளம் என அடையாளம் கண்ட இவர் இது எல்லாளனுக்குரிய சாதனைகளில் ஒன்று என்றார். இதற்கு மேலும் ஆதாரமாக இங்கு கண்டுபிடிக்கப்பட்ட தமிழர் தொடர்பான தொல்பொருட்சின்னங்களைச்சுட்டிக்காட்டினார். இவரின் சமகாலத்தவரான லூயிஸ் என்பவர் தமிழில் உள்ள இடப்பெயர்கள் பல வன்னியில் இருப்பதாகசுட்டிக்காட்டி, இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகள், விக்கிரகங்கள், கட்டிட அழிபாடுகள் என்பன புராதன தமிழ் இராசதானியின் எச்சங்களாக இருக்கலாம் என ஊகம் தெரிவித்தார். 1917 இல் கந்தரோடையில் ஆய்வினை மேற்கொண்ட போல்பீரிஸ் என்பவர் தொல்லியல் ஆய்வில் தமிழர் பிராந்தியங்கள் புறக்கணிக்கப்படக் கூடாதென வலியுறுத்தினார். இதற்கு பாளி இலக்கியங்கள் கூறும் வரலாற்றுக்கு முரணான சான்று

# சிலையின் உயிர்



இராப்பகலாய்
மாபெரும் இடர்மலை குடைந்தெம்
சிலை மீதான தேடலில் நாம்! ...

நமக்கெனச் சொந்தமாய்
சிலைதனைச் செதுக்குகிறோம்;
நம் இனத்தின் சிதறிக்கிடந்த
அடையாள முத்துக்கள்
ஜொலிக்கும் படியாய் அதிற் பதித்து
நவீனமாய்
பிரம்மாண்டமாய்.

சொந்த அடையாளத்திற்காய்
கௌரவமான பாரம்பரியத்திற்காய்
அது தேவை நிச்சயமாய்
நமக்கு!

எம் உயிர் குழைத்த
உழைப்பின் நிமித்தம்
உயிர்பெறும் நமது சிலை!

எம் உயிர்குழைத்த
உழைப்பின் நிமித்தமே
உயிர்பெறும் நமது சிலை!

**இளந்திரையன்**

கள் பல அங்கு கண்டுபிடிக்கப்பட்டமை ஒரு காரணமாகும். இக்கண்டுபிடிப்புகளும், ஆங்கிலேய அறிஞர்களது கருத்துக்களும் ஈழத்தமிழர் வரலாற்றுக்கு ஓரளவு புதிய வெளிச்சம் ஊட்டுபவையாக அமைகின்றது. ஆயினும் இவை சிங்கள மக்களது இரண்டாயிரம் ஆண்டுகால பாரம்பரியவரலாற்று நம்பிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. அத்துடன் பிற்காலத்தில் எழுந்த வரலாற்று நூல்களிலும் இவை முக்கியத்துவப்பட்டதாகவும்தெரியவில்லை.

## சுதந்திரப் போராட்ட காலமும் வரலாறும்

உலகில் அன்னியரது ஆதிக்கத்திற்கு எதிரான சுதந்திரப் போராட்ட இயக்கங்கள் தோன்றி வளர சுதேச மக்களுக்கிருந்த வரலாற்றுப் பாரம்பரியமும், வரலாற்று உணர்வும் ஒரு காரணமாக கூறப்படுகிறது. இக்காலப் பகுதியில்தான் பல நாடுகளில் வரலாற்று ஆய்வுகள் தீவிரமடைந்தன. இதற்கு இஸ்ரவேல், இந்தியா போன்ற நாடுகள் சிறந்த உதாரணங்களாகும். இந்திய மக்களின் சுதந்திர உணர்வை மதிக்கத் தவறிய பிரித்தானியர் பரந்த நிலப்பரப்பை கொண்ட இந்தியாவை ஜனநாயக முறையில் ஆளும் தகுதி இந்தியருக்கு இல்லையெனக் கொச்சைப்படுத்தினர். இது இந்திய வரலாற்றறிஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தின. இதை மனதிற் கொண்டு இந்திய மக்களின் பழமையையும், பெருமையையும் வெளிப்படுத்தும் வகையில் பல நூல்களை எழுதினர். இதன் மூலம் பிரித்தானியருக்கு முன்னரே ஜனநாயக மரபில் பரந்த இந்தியாவை ஒரு குடையின் கீழ் ஆண்ட அனுபவம் மட்டுமன்றி, இந்தியாவின் இயற்கையெல்லையைத் தாண்டி தென்கிழக்காசியா வரை தமது ஆதிக்கம் நிலைத்திருந்ததை உறுதிப்படுத்தினர். இதை உறுதிப்படுத்தும் வகையில் **பரந்த இந்தியா, விசால இந்தியா** என்ற பெயரில் பல நூல்கள் வெளிவந்தன. இந்த ஆய்வுகள் இந்தியாவின் ஒவ்வொரு இனத்தினதும் மொழியினதும் தனித்துவத்தை வெளிப்படுத்திய அதேவேளை, இந்தியர் என்ற ஐக்கியத்தையும் ஏற்படுத்தின. இவை வேற்றுமையில் ஒற்றுமை என்ற கோட்பாட்டை இந்தியாவில் வலுப்படுத்தியது.

இந்தியாவில் ஏற்பட்ட இவ்வரலாற்றுணர்வு சமகாலத்தில் இலங்கையில் ஏற்பட்டதாக கூறமுடியாது. மாறாக 19ஆம் நூற்றாண்டில் சிங்கள மக்களிடையே இருந்த பௌத்த சிங்கள கலாச்சார விழிப்புணர்வு 20 ஆம் நூற்றாண்டில் இனவாதமாக மாறி ஏனைய மக்களுக்குரிய கலாச்சார தனித்துவத்தை ஏற்கமறுத்தது. இதன் காரணமாக 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டங்களில் ஏற்பட்ட வரலாறு, தொல்லியல் ஆய்வுகள் தமிழருக்கு எதிரான இன உணர்வோடு, சிங்கள மக்களின் முன்னுரிமையும், நாட்டுரிமையும் நிலைநிறுத்தும் நோக்கில் நெறிப்படுத்தப்பட்டது. அந்த நோக்கோடு வரலாற்று ஆய்வை மேற்கொண்டவர்களில் பேராசிரியர் பரணவிதான சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். இவர் பௌத்தமதம் சார்ந்த எச்சங்களை ஒரு மதத்தின் பண்பாட்டு எச்சமாக கருதாது சிங்கள இனத்தின் பண்பாட்டு எச்சமாக கருதினார். இதன் மூலம் பௌத்த எச்சங்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் சிங்கள மக்களே வாழ்ந்தனர் என வலியுறுத்தினார். இதற்கு கந்தரோடை, வல்லிபுரம், குச்சவெளி ஆகிய இடங்களில் கிடைத்த பௌத்தமத எச்சங்கள் தொடர்பாக இவர் கூறிய கருத்துக்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும். பௌத்த, சிங்கள மக்களுக்கு சாதகமாக மகாவம்சம் கூறிய கருத்துக்களை தனது தொல்லியற் கண்டுபிடிப்புக்களுக்கு பயன்படுத்திய பேராசிரியர் பரணவிதான தமிழர்களால் இலங்கையில் மகாயான பௌத்தமதம் வளர்ந்ததாக மகாவம்சம் கூறுவதை ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. இந்த வரலாற்று உண்மையை மறைப்பதன் மூலம் ''ஈழத்தமிழர்கள் வரலாறு இல்லாத தமிழர்கள்,'

''பாரம்பரியம் இல்லாத தமிழர்கள்'' என்ற கருத்து தொடர்ந்து நிலைத்துநிற்க இவர் வழிவகுத்தார். இத்தகைய ஒரு மனோ பாவம் ஏனைய நாடுகளைப் போலல்லாது இலங்கையின் சுதந்திரப் போராட்ட காலத்தில் கூட வளர்ந்தமை ஈழத்தமிழர் வரலாறு மறைக்கப்படக் காரணமாகியது. இதன் வெளிப்பாடாகவே சுதந்திர இலங்கையில் வெளிவந்த வரலாற்று நூல்கள் அமைந்தன.

## அரசும் வரலாறும்

காலத்திற்கு காலம் இலங்கை அரச வெளியீடாக வந்த வரலாற்றுப் பாடநூல்களில் எல்லாம், மொழி, மதம் என்பவற்றினால்வேறுபட்ட தமிழ்,சிங்கள, முஸ்லீம், பறங்கிய மக்கள் தமது வரலாற்றுப் பழமையையும், பெருமையையும் தெரிந்து இந்த நாட்டில் இன ஐக்கியமாக வாழ்வதற்கு இவ்வரலாற்றுநூல் வெளியிடப்படுவதாகநூலின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால்இவ்வுண்மை நூலின்முன்னுரையோடு மறைந்து விடுகிறது. நூலின் உள்ளடக்கம் இலங்கை வரலாறு என்பது பௌத்த சிங்கள மக்களின் வரலாறாகவே சித்திரிக்கப்பட்டுள்ளது. இலங்கை சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் வெளிவந்த வரலாற்று நூல்களில் ஒப்பீட்டளவில் ஈழத் தமிழர் வரலாறு இடம்பெறாது போனதற்கும் சிலகாரணங்கள் இருக்கலாம். ஆனால் கடந்த மூன்று சகாப்தங்களிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியற்சான்றுகள், அவை தொடர்பான கருத்துக்கள் தமிழரின் வரலாற்று பழமையை வெளிப்படுத்தி நிற்கின்றன. இக்கண்டுபிடிப்புகள், கருத்துக்கள் இன வேறுபாட்டிற்கு மேலாகஇன ஐக்கியத்தை, பௌத்தஇந்துகலாச்சாரஒருமைப்பாட்டை வலியுறுத்துகின்றன. ஆனால் இவற்றில் எவையுமே இன ஐக்கியத்தை உருவாக்க போதிக்கப்படுவதாக கூறும் வரலாற்றுநூல்களில் சேர்த்து கொள்ளப்பட்டதாக தெரியவில்லை. மாறாக 2200 வருடங்களாக கூறப்பட்டு வந்த எல்லாளன் சமாதியில் உள்ள மனிதச்சாம்பல் துட்டகாமினிக்குரியதாக கூறி அச்சமாதியை துட்டகாமினியின் சமாதியென திரிபுபடுத்தும் முயற்சிக்கு அரசு சாதகமாக நடந்து கொள்கிறது.

புராதன இராசதானிகள் அமைந்த இடங்கள், கலாசாரமையங்கள், வரலாற்றுப் பழமைவாய்ந்த தொல்பொருட்சின்னங்கள் இலங்கை அரசின் பாதுகாப்புக்குரியதென வரையறை செய்யப்பட்டுள்ளது.இது இற்றைக்கு 1000 வருடங்களுக்கு முன்னர் கைவிடப்பட்டு கவனிப்பார் அற்ற நிலையில் இருந்த அநுராதபுர, பொலநறுவை இராசதானிகள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு இலங்கையின் வரலாற்றுப்பழமையை புனிதச்சின்னங்களாக பாதுகாக்க உதவியது. ஆனால் இவைகளைப் பாதுகாக்கும் சிங்கள அரசுகள் இற்றைக்கு 350 வருடங்களுக்கு முன்னர்கைவிடப்பட்ட தமிழரின் இராசதானி அமைந்த நல்லூரைப் பாதுகாப்பதில் எதுவித அக்கறையும் காட்டவில்லை. தமிழர் தரப்பில் இருந்து இவ்விராஜதானியைப் பாதுகாக்கும் கோரிக்கைகள் காலத்திற்கு காலம் முன்வைக்கப்பட்ட போதிலும் அரசும், அரச தொல்பொருட் திணைக்களமும் இதற்கு மௌனமே செலுத்தின. மாறாக வரலாற்று மையங்களுக்கான இலங்கை வரைபடத்தில் நல்லூரின் முக்கி

> *எமது மொழியும் கலையும் பண்பாடும் எமது நீண்ட வரலாற்றின் விழுதுகளாக எமது மண்ணில் ஆழமாக வேரூன்றி நிற்பவை. எமது தேசிய வாழ்வுக்கு ஆதாரமாக நிற்பவை.*
>
> தமிழீழ தேசியத் தலைவர்
> திரு. வே. பிரபாகரன்

யத்துவம் மறைக்கப்பட்டு, தமிழர் பிராந்தியத்தில் உள்ள பௌத்த மையங்கள் முதன்மைப்படுத்தப்பட்டன. இச்செயல்கள் 2000 ஆண்டுகால வரலாற்றுத்திரிபுகளுக்கு அரசும்துணைபோவதையேகாட்டுகின்றன. இதனால் ஈழத்தமிழரின் தொன்மையான தொடர்ச்சியான வரலாறுபற்றிய ஆய்வு தமிழர்தரப்பில், தமிழர் பிராந்தியத்தில் இருந்து வெளிக்கிளம்புவது அவசியமாகும்.

மேலே சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளால் இலங்கை தொடர்பான வரலாற்று நூல்களில் ஈழத்தமிழர் வரலாறு தெளிவற்ற பாத்திரமாக இருந்து வருகின்றது என்பது உண்மைதான் ஆனால் இதையிட்டு தமிழ் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இன்று இந்திய நாகரிகத்தின் தொட்டில் எனக்கூறப்படும் தமிழ் நாட்டிற்கு 14 ஆம் நூற்றாண்டுவரை ஈழத் தமிழரைப் போல ஒரு வரலாற்று மரபு இருக்கவில்லை. இந்தியா சுதந்திரம் அடையும் வரை வெளிவந்த இந்திய வரலாற்று நூல்களில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்ட பிராந்தியமாகவே இருந்துள்ளது. ஆனால் காலப்போக்கில் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளும், தமிழ் நாட்டு அறிஞர்களிடையே வெளிக்கிளம்பிய வரலாற்று உணர்வும் தமிழ்நாட்டு மக்களுக்குத் தொடர்ச்சியான வரலாற்றுப் பெருமை உண்டு என்பதை உலகறியச் செய்தன. இந்த மாற்றம் ஈழத்தமிழர் வரலாற்றைப் பொறுத்தவரை பல ஆண்டுகளுக்குப் பின்னர் மிக அண்மைக்காலத்திலேயே அரும்பத் தொடங்கியுள்ளது. 1960 க்கு முன்னர் இரண்டாயிரம் ஆண்டுகால வரலாற்று மரபை முன்னெடுத்துச் சென்ற பல்கலைக்கழக அறிஞர்கள், ஈழத்தமிழர் வரலாறு பற்றி ஆராயமுற்பட்ட தமிழ் அறிஞர்கள் சிலரிடம் அப்படியான வரலாறு உண்டா? எனக் கேலி செய்தனர். இன்று அவ்வறிஞர்களில் சிலர் தமது முன்னைய கருத்துக்களை மாற்றி சிங்கள மக்களைப் போல் தமிழர்களுக்கும் தொன்மையான வரலாறு இந்த நாட்டில் உண்டு என்பதை நாசுக்காகத் தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர். இது அறிஞர்களிடையே ஏற்பட்ட அறிவு மாற்றமல்ல. மாறாக வரலாற்றுப் பெறுபேறுகளின் நிர்ப்பந்தம்.

உலகில் ஏற்பட்ட விஞ்ஞான வளர்ச்சி ஏனைய துறைகளைப் பாதித்ததைப்போல் வரலாற்று ஆய்விலும்செல்வாக்குச் செலுத்தியது. இதன் காரணமாக வரலாற்று ஆய்வு தனியொரு துறையில் தங்கியிராது பல்வேறு துறைகளுடன் இணைந்து வளர்ச்சியடைய நேரிட்டது. இதில் தொல்லியல், மானிடவியல், சமூகவியல் போன்ற துறைகள் சிறப்பாக குறிப்பிடத்தக்கன. இவற்றின் மூலம் வெளிக்கிளம்பிய வரலாறு பெரும்பாலான நாடுகளின் பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகளை மாற்றியமைத்தன. இதில் இலங்கை, தென்கிழக்காசியா போன்ற நாடுகள் சிறப்பாக குறிப்பிடத்தக்கன. இலங்கையில் கடந்த இரு சகாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட தொல்லியல், சமூகவியல், மானிடவியல் போன்ற ஆய்வுகளின் முடிவுகள்பெருமளவுக்கு பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறும் வரலாற்றை நிராகரிப்பவையாகவே அமைந்துள்ளன. இன்று இலங்கை நாகரிகத்தின் தோற்றம் சிங்கள இனத்தின் உருவாக்கம் என்பன வற்றை அண்மைக்காலக் கண்டுபிடிப்புக்கள் மூலம் கட்டியெழுப்ப பல அறிஞர்கள் முன் வந்துள்ளனர் இவர்கள்மகாவம்சம் போன்ற பாளி இலக்கியங்கள் கூறும் வரலாற்றை வெறும் கட்டுக்கதையெனக் கூறும் அதே வேளை, மகாவம்சத்தில் மறைக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கும் சிங்கள மக்களைப்போல தொன்மையான வரலாற்றுச் சான்றுகள் உண்டு என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனர். அவர்களுள் சுசந்தா குணதிலகா, சத்தமங்கலம்கருணாரத்தின, இ.பி.பெர்ணாண்டோ, சுதர்சன் செனிவரட்ன போன்ற அறிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இந்நிலையில் ஈழத் தமிழர்களிடையே ஏற்பட்டுள்ள வாலாற்று உணர்வும், தமிழர் பிராந்தியங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் ஆய்வுகளும் நீண்டகாலமாக மறைக்கப்பட்டு வந்த ஈழத்தமிழர்வரலாற்றிற்கு புதிய வெளிச்சம் ஊட்டுபவையாக உள்ளன. (தொடரும்)

வெளிச்சம் உலகெலாம் பரவட்டும்...

சுழிபுரத்தில் நம்பிக்கையுடன்
தொடர்ந்து செயல் படுகிறோம்

- உழுந்து
- பயறு
- மிளகாய் திரிக்கவும்
- நெல் - உடைத்து
- அரிசி - தீட்டி
- மாவு - அரைக்கவும்

நாடுங்கள்

தேவி கிறைண்டிங் மில்

பிரதான வீதி, சுழிபுரம்



முன்பு அளவெட்டி!
இன்று ஆலடி!

என்றும் உறுதியுடன் எமது சேவை தொடர்கிறது

மாவு அரைத்தும்
மிளகாய் திரித்தும்
நெல் அரிசி குற்றியும் தீட்டியும்

உங்கள் சிரமத்தைத் தணிக்கின்றோம்

இன்றே நாடுங்கள்

நியூ தாட்சா அரைக்கும் ஆலை

ஆலடி, மானிப்பாய் வீதி,
உடுவில்

# யதார்த்தம்



நாமகள்

ஒரு கணம்தான்
அதிலும்
குறைவாகக் கூட இருக்கலாம்.
யாருமே எதிர்பாராமல்
அது நிகழ்ந்தது.

அந்தச் சந்தியை
கடந்து கொண்டிருந்தவர்கள்,
தேநீர்க் கடையினுள்ளே
அமர்ந்திருந்தவர்கள்,
மண்ணெண்ணெய்க்காய்
வரிசையில் நின்றவர்கள்
எல்லோரையும் தாண்டி
அவனுக்கு முன்பாய்
நிகழ்ந்த வெடிப்பு.

மேலே விமானங்கள் இல்லை;
ஷெல்தான்.

அவன்,
ஒரு முறை மேலெழும்பி
கீழே வீழ்ந்தான்.
எந்தச் சத்தமுமில்லை.
கத்த நினைப்பதற்குள்
அவன் இறந்திருக்க வேண்டும்.
வெடிப்பின் அதிர்வில்
அவன் கத்தல்
கேட்காமலும் போயிருக்கலாம்.
எதுவும் சொல்வதற்கில்லை
சனங்கள்
திடீரென ஒதுங்கிப் போனார்கள்.
தேநீர்க் கடையின் பாட்டுக் கூட
நின்று போயிருந்தது.
வெறிச்சோடிய வீதியில்
அவன் மட்டும்
தனியாகக் கிடந்தான்.
கையொன்று
வீதியின் மறுகரையில்
விரல்களை நீட்டியபடி
யாரையோ
குற்றஞ் சாட்டுவதாய்...

சில நிமிஷங்கள்தான்.

'அம்புலன்ஸ்' வந்து
எல்லாவற்றையும்
அள்ளிக் கொண்டு போனது.
எஞ்சியதாய்
கொஞ்சமாய் அவனது இரத்தம்
ஒன்றிரண்டு
சைக்கிள் கம்பிகள்
ஷெல் துண்டுகள்
அவ்வளவு தான்.

வாகனங்கள்
அவற்றையும்
துடைத்துக்கொண்டே கடந்தன.

வீதியில்
இப்போது எதுவுமேயில்லை.
எல்லாமே
பழையபடி.

மண்ணெண்ணெய் வரிசை
முன்பை விட நீண்டிருக்கிறது
தேநீர்க் கடையிலும்
புதிதாய்
ஒரு பாட்டு ஆரம்பமாகியிருக்கிறது
சனங்கள்
விரைந்து கொண்டிருக்கிறார்கள்
எதுவுமே நிகழாத மாதிரி.



# நேர்காணல்

## சோக்கன்

நேர்முகம்
**கருணாகரன்**

● ஈழத்துத் தமிழிலக்கியக் குடும்பத்தின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவராகிய தங்களின் இலக்கியப் பிரவேசம், வளர்ச்சி, முதிர்ச்சி, வாழ்க்கைப் பின்புலம் பற்றி இளைய தலைமுறை அறியக் கூடியதாகக் கூறுங்கள்:

☐ நான் பிறந்தது 02-06-1930 இல்.
பிறந்த ஊர் ஆவரங்கால்.
பெற்றோருக்கு ஒரே மகன்.
தந்தை இறந்த பொழுது எனக்கு ஒரு வயது.
மிகவும் வறுமை. இதனால் என் தாயார்
யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிலே
வந்து தம் உறவினரோடு
வாழத்தொடங்கினார். 18 வது வயது வரை
வண்ணார் பண்ணையில் (நீராவியடியில்)
வாழ்ந்தோம். பின்பு என் ஒன்றுவிட்ட
அண்ணரோடு நாயன்மார்கட்டில்
வாழத்தொடங்கினோம். இன்றுவரை
நாயன்மார்கட்டிலேதான் என்
குடும்பத்தோடு வாழ்கிறேன்.
எட்டுப்பிள்ளைகள். பேரப்பிள்ளைகளும்
உண்டு.
1944இல் வீரகேசரியில் எனது
முதற்கதை ''தியாகம்'' வெளியாயிற்று.
என் தமையனார் முறையினர்
அச்சகத்தொழிலாளி. மாமனார்
புத்தகசாலை ஒன்றில் எழுதுவினைஞர்.
சிறிய தகப்பனாரில் ஒருவர்
ஆயுர்வேத வைத்தியர். இவர்களும்,
என் சிற்றன்னைமார், அத்தைமார்
எல்லோருமே புத்தகப் பித்துக்கள்.
பத்திரிகைகள், சஞ்சிகைகள், புதினங்கள்,
பாரதராமாயணக் கதைகள் என்று
அந்தச் சிறிய வயதில்
எனது வாசிப்புப் பசிக்குப்
பெருந் தீனி கிடைத்தது. அக்காலத்தில்
யாழ்ப்பாணத்தில் தெருவுக்குத்தெரு
படிப்பகங்கள். வீட்டில் எனக்குக்
கட்டுப்பாடு குறைவு. எனவே
மேலதிக வாசிப்புக்கும் வாய்ப்புக்கள்
கிடைத்தன.
புத்தகப் புழு ஆனேன்.
போதும் போதாததற்குத்
த. இராஜகோபாலன்,
(மதுரகவி) நாகராஜன், இராமச்சந்திர ஐயர்
ஆகிய பள்ளித்தோழர்களும்
கிடைத்தார்கள். வாசித்தவை பற்றி
விமர்சித்தல், கலந்துரையாடல்,
படவிமர்சனம் என்று இவர்களின்
கலையுறவுகளும் என் எழுத்துக்குத்
தூண்டுகோல்களாயின.
முதற்கதையே வெளியான

50 ஆண்டுகோலமாக ஈழத்து இலக்கிய உலகில் தொடர்ந்து இயங்கிவரும் திரு. சொக்கன் (க. சொக்கலிங்கம்) அவர்கள் சிறுகதை, நாவல், கவிதை மற்றும் மொழியியல் செயற்பாடுகள் எனப் பன்முகப்பட்ட ஆளுமை வாய்ந்தவர். செல்லும்வழி இருட்டு, சீதா ஆகிய நாவல்களுடன் நூற்றுக்கணக்கான சிறுகதைகளையும் எழுதிய இவரின் சிலம்பு பிறந்தது, சிங்ககிரிக் காவலன், மானத்தமிழ்மறவன் என்ற நூல்கள் குறிப்பிடத்தக்கன. சலத், பத்திக் சந்த் என்பன இவரின் மொழிபெயர்ப்பில் வந்தவை. இவற்றுடன் நெடும்பா—3 என்ற காவியத்தையும் இவர் நமது இலக்கியத்துக்கு தந்துள்ளார். மொழியியல் புலமை வாய்ந்த இவர் மொழியியல் நூல்களை எழுதியதுடன் நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதிவெளியிட்டார்.

நீண்ட காலமாக எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை மனப்பூர்வமாக ஏற்று போராட்டத்துடன் இணைந்து இலக்கிய, மொழியியல் முயற்சிகளில் முன்னின்று உழைத்துவருகின்றார்.

தன்னம்பிக்கைவேறு. சிறுகதை, நாடகம், கட்டுரை, கவிதை என்று அகலக்கால் வைக்கத் தொடங்கினேன். வாலிபத்தில் ஆடியவள் முதுமைக் காலத்திலும் காலை ஆட்டுவதுபோல் இன்றும் அவ்வப்போது எழுத முனைப்பு ஏற்படுவது உண்மைதான். முதுமை என்னை வடைந்ததுபோல முதிர்ச்சியும் என்னை அடைந்துள்ளதா என்பது கேள்விக்குரியது. பெருகிவரும் புத்நாக்கங்களை படிக்கையில் என் படைப்புக்கள் பற்றி மீளாய்வு செய்யவேண்டும் போலத் தோன்றுகின்றது.

● ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான தங்களின் இலக்கிய அநுபவத்திலிருந்து ஈழத்து இலக்கிய உலகம் பற்றிய தங்களது கணிப்பீட்டைச் சொல்லுங்கள்:

□ ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை (உலகம்பலவிதக்கதைகள்), வரணியூர் இராசையா (பவளகாந்தன் அல்லது கேசரி விஜயம் முதலாம் துப்பறியுங்கதைகள்) போன்றவை நாற்பதுகளின் தொடக்கங்களில் நான் வாசித்தவை. சரளமான நடையில் 'மெரீனா பீச், நினைவின்றி எழுதப்பட்ட இவை ஏதோ ஒரு படிப்பினையைத் தந்தன. பிறகு 'சம்பந்தன்', 'இலங்கையர் கோன்', சி. வைத்தியலிங்கம் வருகிறார்கள். வடமொழி, ஆங்கிலம், தமிழ் இலக்கிய அறிவும் பரந்த வாசிப்பும் கொண்டு நல்ல சிறுகதைகளைப் படைத்து இவர்கள் வழிகாட்டினார்கள். 1943 இல் மறுமலர்ச்சி இயக்கமும் 'மறுமலர்ச்சி' சஞ்சிகையும் தோன்றுகின்றன. சமகால அரசியல், சமூக, மொழி, இன உணர்வுகளோடு மரபுத்தமிழின்கட்டை உடைத்துக்கொண்டு, அ. செ. மு, அ. ந. கந்தசாமி, வரதர், வ. அ. இராசரத்தினம் போன்றோர் படைப்பிலக்கியத்தில் சுவடு பதிக்கிறார்கள். 1956 இலிருந்து தொழிலாளவர்க்கத்திலிருந்து

எழுத்தாளர் தோற்றம். 60 களில் பல்கலைக்கழக ஆசிரியர்களும், பட்டதாரிகளும் புதிய வேகத்தோடு எழுத்துலகில் கால் வைக்கிறார்கள். படிப்படியாக எழுத்தாளர் எண்ணிக்கையும், எழுத்துப் புலப்பரப்பும் விரிவடைகின்றன. 'எதார்த்தம்' என்பதோடு சொற்சிலம்பங்கள், மண்வாசனை என்றெல்லாம் புதிய வீச்சுக்கள் தலைதூக்குகின்றன. இன்று போராட்ட காலம். அதற்கேற்பச் சத்திய தரிசனங்கள் முன் எக்காலத்திலும் அதிகமாகத் தலைதூக்கக் காண்கின்றோம். உணர்ச்சித் துடிப்பும், ஆவணப்படுத்தும் ஆர்வமும் இன்று மிகப் பெருமளவில் வெளிப்படக் காண்கிறேன். இவை விரிவாக ஆராயப்படவேண்டியன.

● காலநீரோட்டத்துடன் இணைந்து சோராது எழுதிவரும் எழுத்தாளர்களில் தாங்களும் ஒருவர். நீண்ட இலக்கியத் தொடரோட்டத்தின் வாயிலாக இன்று முதிர்ந்து வரும் போராட்ட இலக்கியம் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

□ இது வீரயுகம். உலகெங்கும் வீரயுக இலக்கியங்கள் போராட்டத்தையே மையமாகக் கொண்டு தோன்றியது வரலாறு தரும் பாடம். போரின் தவிர்க்க முடியாத தேவை பற்றி உள்ளத்தைத் தொடும் வகையிலே போராளிகளிற் பலரும், எழுத்தாளர்களிற் சிலரும் இலக்கியம் படைக்கிறார்கள். போரின் விளைவுகள் பற்றியும், அது முழுச் சமுதாயத்தையுமே எவ்வாறு பாதித்துவருகிறது பற்றியும் இன்னும் கூடிய வீச்சான படைப்புக்கள் தோன்ற வேண்டும் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

● நாவல், சிறுகதை, கவிதை, நாடகம் என இலக்கியத்தின் பல வடிவங்களையும் கையாண்டு எழுதியுள்ள தாங்கள், தனித் தமிழ்ப் பிரயோகத்திலும் தீவிர அக்கறை செலுத்துகிறீர்கள். இலக்கியத்தில் தனித்தமிழ்ப் பிரயோகம் எந்த அளவுக்குச் சாத்தியமாகும்?

□ நான் இந்த நேர்காணலுக்கு முற்றமுழுக்கத் தனித்தமிழையே கையாளத்தான் முதலில் எண்ணினேன். ஆனால் அதற்கான காலம் இன்னும் குதிரவில்லை என்பதனாலேயே கலப்புத் தமிழிலே கூறமுடிவு செய்தேன். இது ஒரு புறமிருக்க, பின்வருங் காரணங்களாலேயே பிறமொழிப் பிரயோகங்கள் அதிகரித்து விட்டன என்பது என் கருத்து.

1. தமிழ் நாட்டு எழுத்தாளர்களை நீண்ட காலமாகப் போலிப்புச் செய்வதே என்னை உள்ளிட்ட எழுத்தாளர் பலரின் போக்காக இருந்து வந்ததாலும், புதிய சொல்லாக்கங்களை ஆக்கி உலாவவிடும் பேரவாவாலும் அவற்றின் ஒலி நயத்தில் உண்டான ஆர்வத்திலுமே வரையறையின்றிப் பிறமொழிச் சொற்களை நாம் அதிகம் அதிகமாகக் கையாண்டு வருகிறோம். இதனால் தமிழ்மொழியின் தன்னாற்றல் பெரிதும் கேள்விக்குள்ளாகிறது. ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளரெனப் போற்றப்படும் எஸ். பொன்னுத்துரை 'கரு' (Plot) என்ற சொல்லுக்கு (கதா சரித்திர விந்து) என்ற சொல்லை அறிமுகப்படுத்தியதை இவ்விடத்தில் நினைவுகூரலாம். இத்தகைய குறும்புகள் தமிழைச் சாகடிப்பவை என்பதை எமது எழுத்தாளர் உணர்ந்தால் நல்லது.

2. எமது மண்வாசனைச் சொற்களிற் பல தூய தனித்தமிழ்ச் சொற்களே. அவை புறக்கணிக்கப்பட்டுக் காலப்போக்கில்

தம் உயிர்ப்பையும் இழக்கவும்
நேர்கிறது.
கே. டானியலின் புதினங்களில் எமது
மண்வளச் சொற்கள் உயிர்த்துடிப்புடன்
உள்ளன. அவரின் கதைகளில் பிறமொழிச்
செல்வாக்கு மிகக்குறைவு.
படித்தால் அறியலாம்.

3. பிறமொழி அறிவில்லாது
எழுந்தமானத்தில் அவற்றைப்
பிழைபடக் கையாள்வதை அவ்வம்மொழி
அறிஞர்கள் சுட்டிக்காட்டக்கேட்டிருக்கிறேன்.
சுபிட்சம்-சுபீட்சம் ஆகிறது.
ஆன்மிகம்-ஆன்மீகமாகின்றது.
இப்படிப்பல. விரிக்கிற்பெருகும்.



பிறமொழிச் சொற்களைக் கையாளும்
நாங்கள் அவற்றை வெறும்
குறியீடுகளாகத்தான் இன்று
கையாளுகிறோம்.
எழுத்தாளர்கள் புதிய சில சொற்களைக்
கையாளுகிறார்கள். ஆனால்
இது சரியான, வலுவான தமிழ்ச்
சொல்லா என எண்ணுவதில்லை.
சொல்லாக்கம் செய்பவர்களும்
கருத்துணர்வோடு அவற்றைச்
செய்வதில்லை.
தமிழில் உள்ள சொற்களைத்
தேடிப் பிடித்து, அவற்றை இலக்கியகாரர்கள்
தங்களது எழுத்துக்களில்
பயன்படுத்த வேண்டும்.
அந்தத் தேடல் இல்லாத வரை
தனித்தமிழ்ப் பிரயோகம்
இலக்கியத்தில் சாத்தியமில்லை என
நம்பிக்கை இழந்து கொண்டே
இருப்போம்.
கூடிய வரைக்கும் இதைச்
சாத்தியமாக்கலாம் என
நான் கருதுகிறேன்.

● அவ்வாறெனில் தொர்த்த இலக்கியம் என்பதன் சாத்தியப்பாடு கேள்விக்குரியதாகுமே?

□ தனித்தமிழில் கதை எழுத முடியும்
என்ற நம்பிக்கை எனக்குண்டு.
இதற்கு 'வெளிச்ச'த்தில்
நான் எழுதிய
'மனப்பூட்டு உடைகிறது' என்ற
சிறுகதையே எடுத்துக்காட்டு.
அது பலராலும் பாராட்டப்பட்டது.
தனித்தமிழ்ச் சொற்கள் கையாளப்
பட வேண்டிய இடங்களில் எல்லாம்
தேவையற்ற பிறமொழிச்
சொற்கள்
கையாளப்படுகின்றன.
இது தவிர்க்கப்பட வேண்டியன.
இது பற்றி விரிவாக எழுத
எண்ணியுள்ளேன்.
இதனால்தான் தங்களின்
முதல் வினாவுக்கு இன்னமும் காலம்
குதிரவில்லை என்றேன்.

● நீங்கள் கையாண்டு வந்த சிறுகதை வடிவத்துக்கும் இன்றுள்ள சிறுகதை வடிவங்களுக்குமிடையில் எவ்வாறான வளர்ச்சி காணப்படுகிறது?

□ கையாளும் சொற்கள், வசனங்கள்
என்பனவற்றில் கூடிய கவனமும்
சொல்லும் பொருளில் அதிக கவனமின்றியும்
நேரடியாகக் கதைகூறும்
வழக்கமே முன்பு பெருமளவு இருந்தது.

புதுமைப் பித்தன் போன்ற சிலர்
இதற்கு விதிவிலக்கு.
இன்று சொல்லும் பொருளே
முதன்மை பெறுகிறது.
இன்றுள்ள எழுத்தாளர்வட்டம் பரந்தது.
இந்தக் காலத்துக்குரிய
இலக்கியம் விசாலமடைந்துள்ளது.
முன்பு சமுகத்தின் தேவைகளும்
நோக்குகளும் மெதுவாக இருந்தன,
இலக்கியத்தைச் சுவைப்பது, அதன்மூலம்
சிந்திப்பது என்பதாகவே அன்றைய
இலக்கியங்கள் அமைந்தன.
ஆனால் இன்றுள்ள வளர்ச்சி
உலக நோக்குடன் அறிவியல்,

> ஒரு நல்ல புத்தகம் ஒரு விபத்தைப் போல நம்மைத் தாக்குகிறது. நம்மைச் சூழ்ந்திருக்கும் அமைதியை அது குலைத்து நமது நிலையை உணர வைக்கிறது.
>
> — பிரான்ஸ் காஃப்கா —

போராட்டம் என்று சிந்திப்பதால்
களம் பெரிதாகி, எழுத்தாளனுக்குச்
சொல்லும் விடயம் எத்தனையோ
இருக்கின்றது. அதைச் சொல்லும்
வேகமும் துடிப்பும் இருப்பதால்
அதன் வடிவ அமைதிபற்றிய
சிந்தனை குறைவு.
பாடுபொருளும், வாசகரும் பரந்து
இருப்பதால் முன்னரிலும் பார்க்க
வேறுபட்ட ஒரு நிலையும்
கூடுதல் பொருட்பரப்பும்
கொண்டிருப்பதுதான் இன்றைய வளர்ச்சி.
வேறுவகையில் சொல்வதானால் வடிவ
அமைதியைக் காட்டிலும்
பொருளமைதிதான் இன்றைய வளர்ச்சி
எனலாம்.
வாசகரின் நிலைக்கு ஏற்ப படிமங்கள்,
குறியீடுகள் என அமைந்து,
மனிதனது அறிவியல் சார்ந்து
இன்றைய இலக்கியம்
அமைந்துள்ளது.

**● மற்ற இலக்கிய வடிவங்கள் எழுச்சியுடன் காணப்பெறும் அளவுக்கு இங்கே நாவல் வளர்ச்சியடையவில்லை என்று சொல்லப் படுகிறது. இதன் காரணம் என்ன?**

□ "ஓரங்க நாடகம் என்பது
யன்னலூடாக வெளியே பார்ப்பது
போன்றது.
முழுநீள நாடகம் என்பது
பரந்தவெளியில் நின்று காண்பது
போன்றது" என்று
ஒருவர் சொன்னது சிறுகதைக்கும்,
நாவலுக்கும் பொருந்தக்கூடிய
உவமைதான். பரந்த பார்வைக்கான
பலதுறை அறிவு, அநுபவம், பொறுமை,
விரிந்தநோக்கு என்பன
எமக்குப் போதிய அளவு இல்லையோ
என்று எண்ணுவதே கசப்புத்தான்.
ஆனால் கசப்பான உண்மை என்பதால்
மட்டும் இதனைத்
தள்ளிவிட முடியுமா?

**● உலக நவீன இலக்கியங்களையும் படித்தறிந்து அதே வேளையில் தொன்மையான இலக்கியங்களையும உற்றுணர்ந்த இணைப்புப் பாலமாக விளங்கும் தாங்கள் இனிவரும் காலத்தில் எம்மண்ணில் எவ்வகையான இலக்கியங்கள் தோன்றுமென நினைக்கிறீர்கள்?**

□ உங்கள் கேள்வியின் முதற்பகுதிக்கு
நான் முற்றிலும் தகுதி படைத்தவன்
அல்லன். இருபெருங்கடல்களின்
கரைகளில் நின்று கிளிஞ்சல்களைப்
பொறுக்கிய சிறுகுழந்தையாகவே
என்னை நான் கருதுகிறேன்.

இனிவருங்காலத்தில் எம்மண்ணில் தோன்றப் போகும் இலக்கியங்கள் பற்றி, பேராசிரியர் மு. வரதராசனின் கூற்றொன்றைக் கூறுவதோடு அமைந்து விடுகிறேன் (அவரின் நேரடிக்கூற்றல்ல அதன் சாரம்தான் அது.)

''நெருப்பு மேலெழுந்து எரிவது, நீர் சமநிலையில் ஓடுவது. ஆனால் சூறாவளிகள், புயல்கள் வீசுங்காலத்தில் நெருப்பு சமநிலையில் கீழ் வருவதும், நீர் குமுறி ஆர்ப்பரித்து மேலெழுவதும் காண்கிறோம். புயலும் சூறாவளியும் அடங்கியபின் நெருப்பும் நீரும் தமது இயல்பு நிலைக்குத் திரும்புவதுதான் உண்மை.''

எனவே போர்க்காலம் அடங்கி அமைதிக்காலம் தோன்றும் வரை இன்றுள்ள இலக்கிய நோக்கும், போக்கும் தொடரவே செய்யும். அமைதி மீண்டதும் (எல்லோருமே அதனைத்தான் விரும்புவார்கள்) விழுமியங்கள் (Values) புதிய தோற்றம் எடுக்க, அவற்றுக்கேற்ப இலக்கியங்கள் தோன்றும்.

● எமது தேசிய விடுதலைப் போராட்டத்துடன் அன்றிலிருந்து, இன்றுவரை தீவிர பற்றுக்கொண்டுள்ளீர்கள். இந்தப் போராட்டம் வெல்லுமென்ற நம்பிக்கையிழந்த படைப்பாளிகளும் எம்மிடம் இன்றும் இருக்கிறார்கள். இவர்களுக்குத் தங்களின் அனுபவத்தினூடாக என்ன கூற விரும்புகிறீர்கள்?

□ ''எல்லா விளக்கும் விளக்கல்ல
சான்றோர்க்குப் பொய்யா
விளக்கே விளக்கு''

(திருக்குறள்-299)

□□


**சதா வெதுப்பகத்தின்**

உற்பத்திகள்

தரமானவை

**காரணம்:-**

அவை மிகுந்த நிதானத்துடன் தயாரிக்கப்படுகின்றன.

- பணிஸ்
- பாண்
- ஸ்பெசல் பாண்
- சங்கிலி பணிஸ்
- பிஸ்கட் வகைகள்

**உற்பத்தியாளர்கள்.**

**★ சதா வெதுப்பகம் ★**

மானிப்பாய் வீதி—உரும்பிராய்.

# உடையாத விலங்குகள்

அடேல் ஆன்

'உடையாத விலங்குகள்' (UNBROKEN CHAINS) என்ற தலைப்பில், யாழ்ப்பாணத்தில் நிலவும் சீதன முறைமை பற்றி, அடேல் ஆன் ஆங்கிலத்தில் எழுதிய நூல் தமிழாக்கம் செய்யப்பட்டு தொடர் கட்டுரைகளாக வெளிச்சத்தில் பிரசுரமாகி வருகிறது. இந்த நூலின் முதற் பாகத்தின் இறுதிப் பகுதியை இங்கு தருகிறோம்.

## 4

தாய்வழிச் சொத்துடைமையானது பெண்களுக்கு ஒரு சிக்கலை ஏற்படுத்தி விடுகிறது. சமூக உறவுகளில் இரு தலைப்பட்சமான ஒரு இடர்பாட்டிற்குள் அவர்களை நிறுத்திவிடுகிறது. ஒருபுறம் சாதிய நலனும், மறுபுறம் பெண்ணிய நலனுமாக ஒரு முரண்பாட்டுச் சிக்கலுக்குள் பெண்களைத் தள்ளிவிடுகிறது.

சொத்துடைமையில் சாதிய அம்சம் தலைதூக்கி நிற்கிறது. சொத்துடைமையுள்ள பெண், சொத்துடைமையுள்ள சாதியின் பொதுநலன்களோடு தன்னை இனம் காட்டி, அந்த நலன்களைப் பகிர்ந்து கொள்ள நிர்ப்பந்திக்கப் படுகிறாள். ஆனால் மறுபுறத்தில், சாதியத்திற்கு அப்பால், பெண் என்ற பாலிய வேறுபாட்டின் அடிப்படையில் அவள் ஆணாதிக்கத்திற்கு ஆளாக்கப்படுகிறாள்; ஆணதிகார ஒடுக்கு முறைக்கு அடிமைப்படுகிறாள். இப்படியான ஒரு விசித்திரமான சூழ்நிலையில், சாதிய நலன் ஒருபுறமும் பெண்ணிய நலன் மறுபுறமுமாக, ஒரு முரணிய நிலைக்குள், ஒரே நேரத்தில் அவள் சிக்குப்படவேண்டியிருக்கிறது.

யாழ்ப்பாண சமூகத்தில், சொத்துடைமைகொண்ட பிரிவினரைச் சேர்ந்த பெண்களின் நிலைபற்றியும், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைபற்றியும் பின்னர் பார்ப்போம். இங்கு, இப்பொழுது தாய்வழிச் சொத்துடைமையின் பெறுபேறுகள் பற்றி நோக்குவோம்.

தேசவழமைச் சட்டத்தில் பெண்களின் சொத்துரிமைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இதை நாம் முதலில் வரவேற்கவேண்டும். சொத்துரிமை வேண்டி, பெண்ணினமானது உலகெங்கும் போராடி வந்திருக்கிறது. தொடர்ந்தும் போராடி வருகிறது.

இந்தியாவை எடுத்துக்கொண்டால், இந்துச் சட்டத்தில் காணப்படும் 'ஸ்திரி தான' சொத்துரிமையுடன் ஒப்புநோக்குகையில், தேசவழமை இடமளிக்கும் சொத்துரிமை மிகவும் பரந்தது. இந்தியாவின் வேதாந்த நூல்களிலும், இந்துச் சட்டத்திலும் காணப்படும் ஸ்திரிதானம் என்ற கருதுகோளுக்கும் தேசவழமைச் சட்டத் தொகுப்பில் விபரிக்கப்படும் சீதனத்திற்கும் மத்தியில் அடிப்படையான வேறுபாடுண்டு. பல ஆய்வறிஞர்களின் கருத்து இதுவாகும். ஆரியகலாச்சார வேர்களிலிருந்து உருவாக்கம்பெற்ற இந்துச் சட்டமானது அடிப்படையில் அடக்குமுறையானது பெண்ணடிமைத்தனத்தை வலியுறுத்தி பெண்களுக்கு பாரபட்சம் காட்டுகிறது. ஆண்களின் அதிகாரத்தை நிலைநிறுத்தும் ஆணாதிக்க கருத்துக்களைக் கொண்டது. அத்துடன், பெண்கள் சொத்துக்கு உரிமை பெறத் தகுதியற்றவர்கள் என்ற கருத்தையும் முன்வைத்தது. ஆயினும், காலப்போக்கில் இந்துச் சட்டம் தளர்த்தப்பட்டு, பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட வகையில் சொத்துரிமை அனுமதிக்கப்பட்டதாகவும், ஸ்திரிதானமாக நன்கொடைகள் வழங்கப்பட்டதாகவும் ஆய்வாளர் கூறுவர். ஆனால் யாழ்ப்பாண தேசவழமைச் சட்டத்தில் சொல்லப்படும் சீதனம் வித்தியாசமானது. சாராம்சத்தில் அது ஒரு சொத்துடமைக் கோட்பாடாகக் கொள்ளப்படுகிறது தாய்வழி மூலம் சொத்தைப் பராதீனப்படுத்தும் தனித்துவமான முறைமையைக் கொண்டது. இதன் அடிப்படையில் மரபுவழிச் சொத்திற்கு வாரிசாகும் உரிமையைப் பெண்களுக்கு வழங்குகிறது. (18)

## ஆணாதிக்கமும் பெண்களின் சொத்துடமைமீதான கட்டுப்பாடும்

பெண்களுக்கு பொருளாதாரச் சுதந்திரம் அவசியமென்பதை பெண்ணியச் சிந்தனையுலகம் நீண்டகாலமாகவே வலியுறுத்திவருகிறது. இதனை ஒரு அடிப்படை விதியாகவும் முன்னெடுக்கிறது. பொருளாதாரச் சுயாதீனம் இல்லாத காரணத்தினால் மற்றவர்களில் தங்கிவாழ, மற்றவர்களுக்கு பணிந்துபோக பெண்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். என்றுமே விடுபடமுடியாத சிறையாக அவர்களது வாழ்நிலை அமைந்துவிடுகிறது. எனவே, தேசவழமையில் தாய்வழிச் சொத்துறவுகள் வாயிலாகக் கிடைக்கப்பெறும்சொத்துரிமையானது பெண்களின் பொருளாதார சுயாதீனத்



திற்கு வழிகோலுவதாக உள்ளது. அத்துடன் பெண்களின் தனிப்பட்ட சுதந்திரத்திற்கும் ஏதுவாக அமைகிறது. இந்தக் கூற்றை வைத்துக்கொண்டு, தேசவழமையில் சொல்லப்படும் சொத்துரிமைபற்றி பெண்கள் மருட்சிகொள்ளக்கூடாது. தேசவழமையை மிக நுண்ணியமாக ஆரரய்ந்து பார்த்தால், அதன் சட்ட விதிகளிலும், கருத்தியல் கோட்பாடுகளிலும் பெண்களின் சுயாதீனத்தையும் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தும் பல அம்சங்கள் புலப்படும். இந்தக் கட்டுப்பாடு, குறிப்பாக கணவன்

மூலமாகவும், பொதுவாக சமூகம் வாயிலாகவும் நிலைநிறுத்தப்பட்டு, பெண்களை ஒரு தாழ்ந்தநிலையில் தள்ளிவைத்திருக்கிறது.

கணவன்-மனைவி உறவுபற்றி தேசவழமையில் பொதிந்துகிடக்கும் கருத்துருவங்களிலிருந்து நாம் இதனைப் புரிந்துகொள்ளலாம். சட்ட ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும், பெண்கள் கணவன்மாருக்கு கீழ்நிலையில் உள்ளவர்கள் என்பதை தேசவழமை குறித்துக்காட்டுகிறது. எனவே, தேசவழமையில் மிகவும் முரண்பாடான ஒரு சிக்கலை நாம் கண்டுகொள்ளலாம். அதாவது, பெண்களுக்கு மரபுவழிச் சொத்துரிமையும், சொத்துக்களை சொந்தமாக வைத்திருக்கவும் பராதீனப்படுத்தவும் உரிமையுண்டு. அத்துடன், மனைவியிடமிருந்து எழுத்துமூலம் அனுமதி பெறாமல் மனைவியின் சொத்துக்களை விற்கவோ, ஈடுசெய்யவோ, பராதீனப்படுத்தவோ கணவன்மாருக்கு உரிமையில்லை. ஆனால் அதேவேளை, கணவனின் அனுமதியின்றி தமக்குச் சொந்தமான சொத்துக்களைக் கையளிக்கும் உரிமை பெண்களுக்கு இல்லை. இது கணவனின் 'திருமண உரிமையாக' கொள்ளப்படுகிறது. இந்த முக்கிய விடயத்தில் தேசவழமை கூறுவதாவது.

*"ஆனால் மனைவியானவள், கணவனின் விருப்பாணைக்கு ஆட்பட்டிருப்பதால், கணவனது ஒப்புதலின்றி எதையுமே கையளித்துவிடக்கூடாது." (19)*

தேசவழமைச் சட்டத்தின் நான்காவது பகுதியில் 'பரிசுகளும் நன்கொடையும்' என்ற தலைப்பின் கீழ் இந்த விதி உட்படுத்தப்பட்டிருப்பினும், இது பொதுவாகப் பெண்களின் சொத்துக்களை குறித்து நிற்பதாகவே விளக்கம் கூறப்படுகிறது.

கணவன் – மனைவி உறவுபற்றிய ஒரு பழமைவாதக் கண்ணோட்டத்தை இந்தச் சட்டவிதி புலப்படுத்திக் காட்டுகிறது. மனைவியின் ஒப்புதலின்றி தனது சொத்துடமையை தானே நிர்வகித்து அதனைப் பராதீனப்படுத்தும் முழு சுதந்திரமும் ஆணுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் பெண்ணின் நிலை அப்படியல்ல. அவளுக்கு இந்தச் சுதந்திரம் மறுக்கப்படுகிறது. இது சட்டத்திலும் சம்பிரதாயத்திலும் காட்டப்படும் பாரபட்சத்தை மட்டுமன்றி, ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்ற பாகுபாட்டையும் காட்டுகிறது.

இப்படியான ஒரு சமத்துவமின்மையை இந்தச் சட்டத்தில் காணலாம். இந்தச் சமத்துவமின்மையின் வெளிப்பாடாக தாம்பத்திய உறவும் அமைகிறது. கணவனுடன் கலந்தாலோசித்து, ஒத்துழைத்து, இணக்கம்கண்டு நடக்கவேண்டியவளாகவும், தாம்பத்திய உறவைக் கட்டிக்காக்கும் பணியுடன், குடும்ப வாழ்வில் ஒத்திசைவைப் பேணும் பொறுப்புடையவளாகவும் பெண் சித்தரிக்கப்படுகிறாள். மனைவி என்ற நிலையில் பெண்ணின் சமத்துவத்திற்கு இச் சட்டம் பெரும் பங்கம் இழைத்து விடுகிறது.

இந்தப் பரிமாணத்தில் நோக்குமிடத்து தேசவழமையானது பெண்ணுக்கு பாரபட்சம் காட்டுவதுடன் பெண்ணை சிறுமைப் படுத்தவும் முனைகிறது. முதலாவதாக, தனிப்பட்ட சொத்துடமையில் ஆணுக்குள்ள சுதந்திரம் பெண்ணுக்கு மறுக்கப்படுகிறது. இரண்டாவதாக, பெண்கள் முதிர்ச்சியற்றவர்கள் என்ற கருந்துநிலை இச் சட்டத்தில் மறைபொருளாக அமைந்திருக்கிறது. இதனால் கணவன் என்ற வடிவத்தில் ஒரு ஆணின் பாதுகாப்பும், அந்தப் பாதுகாவலனின் அனுமதியும் அவளுக்கு அவசியமாகக் கொள்ளப்படுகிறது. மூன்றாவதாக, அவளது சொத்துடமை சம்பந்தப்பட்ட முக்கிய விடயங்களில் முடிவெடுக்கும் தகுதியற்றவளாகவும் அவள் கருதப்படுகிறாள். இந்தப் பிரச்சனைகள்

அனைத்திற்கும் மேலாக, அதிகாரத்தின் கடிவாளம் கணவனிடமும், ஒட்டு மொத்தத்தில் ஆண்வர்க்கத்திடமும் உள்ளது என்ற உண்மை நிலையை, சமூகத்தின் கருத்துலகம் புலப்படுத்தி விடுகிறது. எனவே கணவன்—மனைவி சம்பந்தப்பட்டமட்டில், தேச வழமைச் சட்டத்தில் ஆணாதிக்க கருத்து நிலை வேரூன்றி நிற்கிறது. இந்தக் கருத்தாதிக்கம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான சகல சமூக உறவுகளையும் பாதித்து நிற்கிறது. இங்கு, கணவனுக்கும் மனைவிக்கும் மத்தியிலான உறவானது, சமத்துவமான, வயதுவந்த இருவர் மத்தியிலான உறவாகக் கொள்ளப்படவில்லை. மாறாக, தாம்பத்திய உறவானது ஒரு அதிகார உறவாக, ஆணிடமே இறுதியில் அதிகாரம் தரித்து நிற்கும் மேலாதிக்க உறவாகக் கருதப்படுகிறது.

சொத்துடமை வர்க்கத்தின் சொத்துடமை நலன்களைப் பேணுவதாக தேச வழமை அமையப்பெற்றிருக்கிறது. எனவே, பெண்களின் சொத்துடமைபற்றிய சட்டங்களும் அந்தச் சமூகப்பிரிவினரின், அதாவது சொத்துடமை வர்க்கத்தினரின் நலன்களைப் பிரதிபலிப்பதாகவே கொள்ளவேண்டும். எனவே, தர்க்கீகரீதியாக, பெண்ணின் சொத்துமீது ஆணாதிக்க கட்டுப்பாடுகளை விதிக்கும் சட்டங்கள், இறுதியில் ஆண்களின் நலன்களையே பேணுவதாக அமைந்துவிடுகின்றன.

பெண்களின் சொத்துமீதான கட்டுப்பாடு ஆண்களிடமே உள்ளது. இதனால்தான் தாய்வழி மூலம் சொத்துக்கள் பராதீனப்படுத்தும் முறைமையை ஆண்கள் அனுமதிக்க முடிந்தது. திருமணமாகிய பெண்களுக்கு சொத்துடமை வாயிலாகக்கிட்டும் சுயாதீனமும், பொருளாதார சுதந்திரமும் ஆண்களுக்கு அச்சுறுத்தலாக அமையவில்லை. தமது சொத்துரிமை மறுக்கப்படுவதாகவும் அவர்கள் கருதவில்லை. கணவனுக்கு கீழ்ப்பணிந்த மனைவி என்ற அடிப்படையில்கட்டப்பட்ட திருமண உறவானது பெண்களது சொத்துக்களைபராமரிக்கவும், கட்டுப்படுத்தவும் ஏதுவாக அமைந்துவிடுகிறது. திருமணத்தின்போது பெண்களுக்கு சீதனம் வழங்கும் முறைமையும் ஆண்களுக்கு சாதகமானது என்றே சொல்லலாம். ஒரு மனிதன் செல்வந்தனாக இருந்தாலும் சரி, இல்லாதுபோனாலும் சரி, தனது மனைவியின் சொத்தை மிகவும் திறமையாக, கவனமாக நிர்வகிக்க முடியுமானால் அவன் தனது வாழ்நிலையை மேம்படுத்திக்கொள்ளலாம். தனது மனைவியும் குடும்பமும் பொருளாதார ரீதியில் நலன் காணும் அதேசமயம், சொத்துச் செல்வத்திலிருந்து பிறக்கும் அதிகாரமும், தன்நம்பிக்கையும் மனைவிமீதும், குடும்பம்மீதும் அவனுக்குள்ள கட்டுப்பாட்டை வலுவடையச் செய்கிறது. இவ்விதம் ஒரு பெண்ணின் சொத்தும், அவளது சீதனமும் ஆணாதிக்கத்தை வலுப்படுத்துவதுடன் பெண் ஒடுக்கு முறையையும் நீடித்துவருகிறது.

சமூகக் கருத்துலகின் ஒரு முக்கிய அம்சமாக சட்ட அமைப்பைக் கருதலாம். இந்தச் சட்டங்களில் பொதிந்துகிடக்கும் கருத்துகள், நியமங்கள், பெறுமானங்கள் ஆகியன சமூக உறவுகளை, அதாவது சமூகத்தின் அதிகார உறவுகளை நிர்ணயிக்கும் சக்தி வாய்ந்தன. இதன் அடிப்படையில் பார்க்கும்போது சட்டங்களானவை கருத்தியல் இயக்கு சக்தியாக செயற்படவல்லது. இந்தக் கருத்தியல் இயக்கம், தனிமனிதர்களை சமூக ஒழுங்குமுறைக்கு ஒத்துப்போக, பணிந்துபோக நிர்ப்பந்திக்கிறது.

தேசவழமையும் ஒரு சட்டக்கோவை என்பதால், யாழ்ப்பாண சமூகக்கட்டமைப்பின் கருத்துலகில் ஒரு முக்கிய அங்கமாக அமையப்பெற்றிருக்கிறது. பண்டைய வழக்கங்கள், சம்பிரதாயங்களிலிருந்து தோன்றிய இந்தச் சட்டங்களில் பொதிந்துகிடக்கும் கருத்துகளும், பார்வைகளும், பெறுமானங்களும், அன்றிலிருந்து இன்றுவரை, பல நூற்றாண்டு காலமாக யாழ்ப்பாண சமூகத்தின்மீது ஆதிக்கம் செலுத்திவருகி

றது. இந்தச்சட்டங்களின் கருத்தியல் கட்டமைப்பில் பெண்கள்பற்றிய கண்ணோட்டமும், சமூகவாழ்வில் பெண்களின் பங்கு பற்றிய பார்வைகளும் செறிந்துகிடக்கின்றன. இந்தச் சட்டத்தின் கட்டமைப்பை, குறிப்பாக சொத்துடமைபற்றிய அதன் விதிகளை ஆழமாக நுண்ணாய்வு செய்து பார்த்தால், ஆண்களுக்கு கீழானநிலையில், தாழ்த்தப்பட்ட நிலையில், பெண்களின் சமூக உறவுகள் அமையப்பெற்றிருப்பதைக் காணலாம். இந்த வகையில், கருத்தியல் இயக்க சக்தியாகச் செயற்படும் தேசவழமைச் சட்டமானது சமத்துவமற்ற சமூக உறவைப் பேணி வளர்க்கிறது; ஆணாதிக்கத்தை நியாயப்படுத்துகிறது.

(தொடரும்)

உசாத்துணை நூல்களும் குறிப்புகளும்

18. *V. Coomaraswamy. 'THESAWALAME' III. The Hindu Law of Sridhana and the Thesawalame Dowry Law. The Hindu Organ. August 9 th 1933.*

19. *See Mutukisna's Thesawalamai. Page 269.*

உங்களை உங்களுக்கே
ஆச்சரியம் தரும் வகையில்.... படம்பிடித்து தந்திட

★ போட்டோ ஸ்ரீக்கு வாருங்கள் ★

- நவீன கமராக்கள் மூலமும்
- புதிய மிக்சிங் வகைகளுடனும்

உங்கள் விழாவை மேன்மேலும் அழகூட்டுகின்றது.

முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்
ஓடர்கள் கவனிக்கப்படும்

போட்டோ ஸ்ரீ
வீடியோ படப்பிடிப்பகம்
சீரணி, சண்டிலிப்பாய்.

பள்ளிச் சிறுவர்கள்
உள்ளத்தை கொள்ளை கொள்வது

பவானி

நொறுக்குதீன்சுவை பிரியர்கள்
விரும்புவது பவானி

அன்றும் இன்றும்
இனி என்றும்
இல்லம் தோறும் வாங்கி மகிழுங்கள்

- பவானி கச்சான் அலுவா
- பவானி எள்ளு அலுவா
- பவானி பொரிகடலை
- பவானி கச்சான் பருப்பு

பவானி உற்பத்திகள் எங்கும் கிடைக்கும்

விபரங்கட்கு:

**பவானி இன்டஸ்றீஸ்**

32/1 நீராவியடி,
யாழ்ப்பாணம்.

சிறுகதை

# தொலை நோக்கி

நா. யோகேந்திரநாதன்

அவர் அடிக்கடி அந்தத் தொலை நோக்கிக்குள் கண்களைக் கொடுத்துக் கொண்டிருக்கும் போது, மனைவியின் வசவுகளுக்கும், திட்டுகளுக்கும் ஆளாவதுண்டு.

அவர் எப்பொழுதுமே அதைப் பெரிதாக எடுத்துக் கொண்டதில்லை. அவர் சின்னவயதில் கணிதம் படித்த தாலோ என்னவோ அவளின் சத்தம் அளவுக்கு மீறிப் போகும்போது, தானும் அதே தொனியில் சத்தம் போட்டுக் கொள்வார். இரு எதிர் வினைகள் பெருக்கப்படும்போது நேர் வினையாவது போல் அவருடைய சத்தத்தின் பின் அங்கு அமைதி நிலவும்.

அவ்வமைதிக்குப் பின் மென்மை யான தென்றலும் வராமலில்லை.

''இஞ்சாருங்கோப்பா! சாப்பிடுங் கோவன்...!

அவரின் மேல் அவரது மனைவிக்கு எள்ளளவு வெறுப்புக்கூட இல்லை யென்பது அவருக்கு நன்றாகவே தெரியும். ஆனால் அவள் எரிந்து விழுவதும், சீறிச்சினப்பதும் ஏன் என்பதை அவர் இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

சில நேரங்களில் அது. இதற்காகத்தான் என அவர் முடிவுக்கு வர முயற்சிக்கும்போது அம்முடிவை உடைத்தெறியும் வகையில் ஏதாவது ஒரு காரியம் செய்து விடுவாள்.

''நீங்கள் இப்ப சாப்பிடயில்லையே ''? குரல் கொஞ்சம் அழுத்தமாகவே வருகிறது.

''சாப்பிடுவம் ..'' !

''நீங்கள் சாப்பிடாட்டில் சொல்லுங்கோ'' எனக்குப் பசிக்கிது . ''

''நீ சாப்பிடு நான் பிறகு சாப்பிடுறன் ''

திடீரென அவள் கண்கள் கலங்குகின்றன. தொனி சற்றுக் கனிவடைகிறது. ''வாருங்கோ இரண்டு பேரும் சாப்பிடுவம்'' அவளும், அவரும் திருமணம் செய்து 24 ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர்களுக்கிடையில் வேறு ஏதாவது பிரச்சனைகள் தோன்றியதாக அவருக்கு இதுவரை ஞாபகமில்லை.

ஆனால் இந்தத் தொலை நோக்கியைக் கண்டாலே அவளுக்கு இனம்



புரியாத வெறுப்பு வருகின்றது. பேய் பிடித்தவள் போல் ஆவேசமடைந்து விடுவாள்.

அவர் ஒரு பெருமூச்சொன்றை விட்டவராக மெல்ல எழுந்து குசினிக்குள் சென்று சாப்பிடும் தட்டைக் கையிலெடுக்கின்றார்.

அவள் மெல்ல அவர் கையிலிருந்த தட்டை வாங்கித்தானே கழுவிக் கொள்கிறாள். அவர் கைக்குத் தண்ணீரை ஊற்றி விடுகிறாள்.

''கறி நல்லாயிருக்கேப்பா......''?

''நல்லாயிருக்கு''. அவர் சொல்லி முடித்த பின்பு தான் அவருக்குத் தனது பதில் ஒரு புதிய சண்டைக்கு அத்திவாரம் இடக்கூடிய ஆபத்து மிகுந்தது என்பதை உணர்ந்து கொண்டார்.

''நல்ல வேளை'' கறி நல்லதெண்டால் மிச்சமெல்லாம் கூடாதே? என்று அவள் கேட்கவில்லை. கேட்டிருந்தால் ''உன்ரை நச்சரிப்பைவிடக் கறி நல்லாயிருக்குது'' என்று அவர் சொல்ல, பதிலுக்கு அவளும் ஏதோ சொல்ல, அவர் சாப்பாட்டுத்தட்டை ஜன்னலால் தூக்கியெறிந்து விட்டு, கைகழுவியது பாதி, கழுவாதது பாதியாக மீண்டும் தொலைநோக்கியின் பக்கத்தில் போய் அமர,– ஒரு பூகம்பம் தவிர்க்கப்பட்டது அவருக்கு உள்ளார மகிழ்ச்சி.

அவரது மகிழ்ச்சி நெடுநேரம் நீடிக்கவில்லை.

எங்கோ பெய்த மழை பெருகி ஆற்றில் சேர்ந்து அவர் வீட்டுக்குள் நிலவிய மகிழ்ச்சியையும் அடித்துக் கொண்டு போனது.

''தம்பியோட ட்றயினிங் எடுத்த பொடியனைப் பூவரசங் குளத்திலை வைச்சு ஆமி சுட்டுப் போட்டாங்களாம்!''

''ஓ நானும் பேப்பரிலை பார்த்தனான்...'' அதற்குமேல் அவரால் எதுவும் சொல்லமுடியவில்லை.

''தம்பி எங்க நிக்கிறானெண்டாவும் விசாரிச்சியளே...?''

''விசாரிச்சனான்..... ஒருதரும் சொல்லுறாங்களில்லை'' அவர் பொய் தான் சொல்லுறார். ஆனால் அதை விட வேறு வழியில்லை.

அவரைப்பொறுத்தவரை அவருக்கு அவர் சொல்வது, இவர் சொல்வது எதிலுமே நம்பிக்கையில்லை. பாசமுள்ள பெற்ற மனங்களைத் திருப்திப்படுத்த பலரும் பலதைச் சொல்வார்கள். இன்னும் சிலர் பலவீனங்களைச் சாதகமாக்கி அவர்களிடமே பலன் பெறவும் முயல்வார்கள்.

ஒரு மாதத்தில் தம்பி வருவான் என உறுதியளித்தவர்களையும், மூன்று மாதம் நேர்த்தி வைத்தால் தம்பி வீட்டு முற்றத்தில் வந்து நிற்பான் என்றவர்களையும், நாளைக்குத்தம்பியைக் கொண்டு வந்து விடுவன் என்று சூளுரைத்து கோழிக்கறியுடன் சாப்பிட்டு விட்டுப் போனவர்களையும் அவருக்கு முன்பே தெரியும்; ஆனால் அவள் ஏமாறுவதற்கு அவர் எதுவித தடையும் விதித்ததில்லை. வீட்டுக்குள் யுத்தம் ஒன்று நடப்பதை விட பட்டுத்தெளிவது பரவாயில்லை என்று அவர் தனது மனைவியின் விருப்பத்திற்கே விட்டு விடுவார். ஆனால் அவர் தனது தொலை [நோக்கியில் இன்று வரை வைத்துள்ள நம்பிக்கையை இழக்கவேயில்லை. அவர் ஒரு

நாள் கூட அதைப் பார்க்கத் தவறு வதில்லை.

''உவங்கள் உப்பிடித்தான் உள்ளது சொல்லாங்கள்'' என்று சொல்லியவாறே அவருக்கென்றவித்த முட்டையைக் கோதுடைக்கத் தொடங்கினாள் அவள்.

''அம்மா...''!

''நரேன் போலை கிடக்கு'' உடைத்த முட்டையை அப்படியே போட்டுவிட்டு வாசலுக்கு ஓடுகிறாள்.

''இஞ்சாரப்பா நரேனும், அறிவும் வந்திருக்கிறாங்கள்'' அவர் சோத்துக் கோப்பையும், கையுமாக வெளியே வருகிறார்.

''எங்கையிருந்து களைச்சுப் போய் வாறியள், சாப்பிடயில்லை போலை ..?

''இல்லையம்மா நாங்கள் சாப்பிட்டுட்டம்.''

''ஆருக்குச் சொல்லுறியள் கதை பிள்ளையளின்ரை முகத்தைப் பார்த்தால் தாய்க்கு விளங்கும்.'' அவள் பதிலுக்காக காத்திருக்கவில்லை. அடுக்களையில் முட்டை பொரித்த மணம் அவருக்குமூக்கைத்துளைத்தது.

அவித்த முட்டை கூட இனி அவருக்கு கிடைக்கப்போவதில்லை என்பதைப் புரிந்தவராக சாப்பாட்டை முடித்துவிட்டுக் கையைக் கழுவினார் அவர்.

''அதுக்கிடையிலை உங்களுக்கு ஒரு அவசரம்'' தம்பியவையோட இருந்து சாப்பிட்டிருக்கலாம் தானே .'' அவளது கவலையெல்லாம்


வட்டுக்கோட்டையில்....

தரம் குன்றாத

நிறைந்த சேவை....

- கட்டடப் பொருட்களுக்கு **சத்தியா**
- இரும்பு பொருட்களுக்கு **சத்தியா**
- பெயின்ற் வகைகளுக்கு **சத்தியா**
- இரண்டு சக்கரவண்டி உதிரிப்பாகங்களுக்கு **சத்தியா**

உங்கள் திருப்தி

எங்கள் மகிழ்ச்சி

எங்கள் வளர்ச்சி

உங்கள் உறுதி

**சத்தியா**

தெல்லிப்பளை வீதி
வட்டுக்கோட்டை

அவர் சாப்பாட்டை விரைவில் முடித்த தற்காகவல்ல. அவர்களுடன் துணையாக இருந்து சாப்பிட ஆளில்லை என்பது தானென்று அவருக்கு நன்றாகத் தெரியும்.

அதை அவர் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இன்னொரு பக்கத்தில் உள்ளூர மகிழ்ச்சிதான்.

நரேன், அறிவு இருவருமே அவள் கொடுத்த உணவு மட்டுமன்றி ''என்ரை அப்புக்கள் என்ரை ராசாக்கள், அம்மாவை மறவாமல் அடிக்கடி வாருங்கோ !'' இவைகளை வயிறாறவும், நெஞ்சாறவும் உண்டுவிட்டு விடை பெறுகிறார்கள். அவரும் தன் பங்குக்கு தொலைநோக்கியை அவர்கள் பக்கம் திருப்பிப் பார்த்தார்.

அவர்களது விம்பம் நீண்டு, உயர்ந்து பருத்து அவரது தொலைநோக்கியின் கட்புலனுக்கு அடங்காமல்... கைக்குள் அகப்பட்ட திருகிகளையெல்லாம் சுழற்றிச் சரி செய்து...

அவர்களது விம்பங்களை அவரால் அவரது தொலைநோக்கிக்குள் அடக்க முடியவில்லை.

அவர் சோர்வுடன் மனைவியின் பக்கம் திரும்பினார். ''இது கொஞ்சம் பழசாய்ப் போச்சுது''.

அவள் தன் பிள்ளைகளுக்கு உணவு கொடுத்த மகிழ்ச்சியிலிருந்து இன்னும் விடுபடவில்லை. ''பழசெண்டால் உதையேன் கட்டியழுகிறியள். தூக்கி யெறிஞ்சு விடுங்கோ''.

இதையெப்படி அவரால் தூக்கி யெறிய முடியும். அறிவு தெரிந்த காலம் முதல் அவர் இதை விட்டுப் பிரிந்ததில்லை. அவரது வெற்றிக்கும், தோல்விக்கும் அது நண்பனாகவே விளங்கி வருகிறது. சில சமயங்களில் அவர் படுபாதாளத்தில் விழுத்தப்பட நேர்ந்த போதெல்லாம் அதனுதவியுடன் தான் மேலேறி வந்திருக்கிறார்.

ஆனால் அவரால் அவளிடம் ஒன்றை மட்டும் கேட்காமல் இருக்க முடியவில்லை. ''நரேனிட்டையும், அறிவிட்டையும் தம்பியைப் பற்றி விசாரிச்சிருக்கலாமே.

''உங்கடை கதைக்கு உப்புமில்லை, புளியுமில்லை. அதுகள் சரியாய்ச் சாப்பிட்டு எத்தினை நாளோ, நித்திரை கொண்டுதுகளோவும் தெரியாது. களைச்சு விழுந்து போய் வாற பிள்ளையளிட்டை உதைக்கேட்டு நான் ஆக்கினைப் படுத்தட்டே !''

அவர் பெரிதாக ஆச்சரியப்படவில்லை. ஒருமுறை அவரது மூக்குக் கண்ணாடியைக் கழற்றித் துடைத்து விட்டுப் போட்டுக் கொண்டு அவளைப் பார்க்கிறார். அது கூடத் தெளிவாகக் காட்டும் தன் சக்தியை இழந்து விட்டதுபோற்தோன்றுகிறது.

மீண்டும் அவர் தனது தொலை நோக்கிக்கு அருகில் போய் அமருகிறார். அதன் திருகிகளைத் திருப்பத் திருப்ப ஒரு பூகம்பமும், புயலும், இடியும், மின்னலுமாகத் தெரிகிறது. எவ்வளவு முயன்ற போதும் அவர் தேடும் ஏதோ ஒன்றை மட்டும் அவரால் கண்டுபிடிக்கவே முடியவில்லை. அலுத்துப்போய் மீண்டும் வந்து கதிரையில் அமர்ந்து கொள்கிறார்.

முன்பெல்லாம் அவருக்கு அந்தத் தொலை நோக்கியைப் பார்த்துக் கொண்டிருப்பதில் ஏதோ ஒரு இணையற்ற இன்பம் கிடைக்கும். அவரது

மூத்த மகன் பாடல் எழுத, மூன்றாவது மகள் அவர் போட்ட இசைக்குப் பாட, இரண்டாவது மகள் நடனமாட மகன் மிருதங்கம் வாசிக்க, கடைசிமகள் தாளம் போட அந்த ரம்மியமான காட்சியில் அவர் தன்னையே மறந்திருப்பார். அப்போதெல்லாம் அவரது தொலைநோக்கி மிகவும் தெளிவாகவே காட்சிகளைக் காட்டியது.

ஆனால் சில காலமாக அது அவருடன் ஒத்துழைக்க மறுத்தது மட்டுமன்றி குழப்பமான காட்சிகளையே காட்டிக் கொண்டிருந்தது. அவரது மனைவி அடிக்கடி கூறுவது போல் ''அது பழசாகிப் போய்விட்டதோ என்ற சந்தேகம் அவருக்கும் இடையிடையே எழாமலில்லை.

மூன்றாவது வீட்டில் வெள்ளிக் கிழமை விரதத்திற்கு வாழையிலை வாங்கப் போன அவரது மனைவி வாழையிலையுடன் புதிய செய்தி ஒன்றையும் கொண்டு வந்தாள்.

''இஞ்சாருங்கப்பா! இண்டைக்கு நல்லூரிலை ஒரு இயக்கப் பொடியன்ர மிருதங்க அரங்கேற்றமாம்''

சிறு அதிர்வு ஒன்று அவர் நெஞ்சைத் தாக்கியது.

''என்ன பேராம் பொடியனுக்கு?''

''ஏதோ சுதனோ என்னவோ வெண்டு பேர் சொல்லுச்சினம்''

ஒரு கணம் பொங்கிய மகிழ்வு மீண்டும் உறக்கத்திற்குச் சென்று விட்டது. அடுப்பில் அப்பளம் பொரித்த சத்தத்திலிருந்து அவள் இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை யென்பதை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் அவரால் அப்படி இருக்க முடியவில்லை. மெல்ல எழுந்து சென்று தொலைநோக்கியின் அருகில் அமர்ந்தார். மெதுவாக அவர் ஒவ்வொரு திருகியாகத் திருப்பத் தொடங்கினார். மெல்ல மெல்ல ஏதோ ஒரு காட்சி தெளிவாகிக் கொண்டு வந்தது. ஆவலுடனும், அவதானத்துடனும் தொலை நோக்கியின் திருகிகளை மெல்ல மெல்ல அசைத்து சம நிலைக்கு கொண்டு வந்தார்.

தத்தித்தோம் —

ததிகிடதோம் —

மிருதங்கத்தில் அந்தச் சின்னஞ் சிறிய விரல்கள் நர்த்தனமிடுகின்றன. தனி ஆவர்த்தனம் தனித்து வந்ததுடன் நெஞ்சைப் பிழிகின்றது. சுதனின் முகத்தில் இனம் புரியாத பெருமிதம் இழையோட மிருதங்க இசை மண்டபத்தையே தன் முன்னால் கட்டியிழுத்துச் செல்கிறது.

அவரது நெஞ்சுக்குள் ஏதோ ஒன்று திரண்டு வந்து அவரை எங்கோ கொண்டு செல்கிறது. இன்னும்...... இன்னும்...... எதையோ தேடுவதற்காக அது செல்கிறது.

ஏதோ ஒரு வேகமடைந்தவராக தொலை நோக்கியின் திருகிகளைச் சுழற்ற ஆரம்பித்தார். தெரிந்து கொண்டிருந்த காட்சி மங்க, புதிய காட்சி ஒன்று புலனாகிறது.

தம்பி -

தொலை நோக்கியில் தம்பியின் பிம்பம் இப்போ தெளிவாகவே விழுகின்றது. மனம் கிளர்ச்சியடைகிறது.

உடலின் முழுச்சக்தியையும் ஒன்று திரட்டி கண்களுக்குள் தம்பியின் பிம்பத்தையே நோக்கினார்.

தம்பியின் விரல்கள் மிருதங்கத்தில் லாவகமாகத் தவழ்கிறது.
தத்தித்தோம் - ததிகிடதோம் -

அதுமட்டும் கேட்கவில்லை. காதைக் கூர்மையாக்கினார்.

அவனின் ஒவ்வொரு விரலசைவுக்கும் ஏற்ப துப்பாக்கி வேட்டுக்களும் பீரங்கி முழக்கங்களும் கேட்கின்றன.

தம்பியின் முகத்தை உற்று நோக்னார்.

எல்லையற்ற பிரகாசம். வெற்றியை வரவேற்கும் உற்சாகம் அவன் முகத்தில் தவழ்கிறது. அவரது மனதிலும் ஏதோ ஒரு தெளிவு ஊறிப் பரவுகிறது.

எழுந்து குசினிக்குள் ஓடிப் போகிறார்.

''இஞ்சாரப்பா! நான் தம்பியைக் கண்டனான்!''

அவள் ஆச்சரியத்துடன் அவரைப் பார்க்கிறாள்.

அவர் சொன்னதை அவளால் விளங்க முடியாததாகவோ அல்லது அவருக்கு இப்போது தான் விளங்கியது என்பதனாலோ அவளது ஆச்சரியம் என்பதை அவரால் சரியாகப் புரிய முடியவில்லை. □□


உங்கள் நேரத்தை
மீதப் படுத்துங்கள்...

**துரித கதியில் உடனுக்குடன்**

- பயறு, உழுந்து, மிளகாய் திரித்தல்
- மாவு அரைத்தல்
- நெல் உடைத்தல்
- அரிசி வகைகள் தீட்டல்

அனைத்தும் குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்

**விபரங்கட்கு:-**

**மகாலிங்கம் அரைக்கும் ஆலை**

புத்தூர்சந்தி - பருந்தித்துறை வீதி,
புத்தூர்.

*விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய*

**கேசவராஜனின்**

மதிப்பீட்டுரை

# பிஞ்சுமனம் *(வண்ணப்படஒளிப்பேழை)*

உலக சினிமா அரங்குக்குத் தமிழ் சினிமா தெரியாமலே இருக்கும் நிலையை மாற்றுவதாயின் நாங்கள் தான் மாற்ற வேண்டும். உண்மையில் சினிமா என்பது 'கமெரா'வை முதன்மையாகக் கொண்ட 20ம் நூற்றாண்டின் உன்னத கலை வடிவம் என்பதும், அதன் சக்தி மகத்தானது என்பதும் கேசவராஜன் அவர்களின் பிரக்ஞையில் ஆழமாயுள்ளன. ஆம்! எமது வீடியோ திரைப்பட வளர்ச்சிப் பாதையில் **பிஞ்சு மனம்** ஒரு பாய்ச்சல்!

ஒரு திரைப்படத்தில் கோணம், ஒளியமைப்பு, சலனத்தன்மை ஆகியவை முக்கியமானவை என்பதைத் தெரிந்து செய்திருக்கிறார் கேசவராஜன்.

பிஞ்சு மனத்தின் கருப்பொருள் என்ன? அதனைப்பார்த்து முடிய எமது மனதில் நிலைபெறுகிற செய்தி என்ன? இந்தக் கேள்விகளின் விடைகள் பார்வையாளனுக்குப் பார்வையாளன் மாறுபடலாமாயினும் சர்வதேசமும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு கருப்பொருள் அதனுள்ளே உண்டு. ''மனிதர்களால் ஏன் ஒன்றிணைந்து மகிழ்ச்சியாக வாழ முடியவில்லை?'' என்ற கேள்விதான் அந்தப் பரந்து விரிந்த கருப்பொருள்!

போஸ்ட் மாஸ்டர் மாசிலாமணி தனியாக இருக்கிறார். அவருக்கு அன்பு தேவைப்படுகிறது. அன்பு காட்டக்கூடிய குழந்தை ஒன்று முன்வீட்டில் வசிக்கிறது. ஆனால் அந்தக் குழந்தையிடம் அன்பு காட்டமுடியாதபடி அவரை ஏதோ ஒன்று தடுக்கிறது. அது என்ன? இந்தக்கேள்வியை எம்மனதில் எழுப்புவதே படத்தின் வெற்றி எனலாம். படத்தின் ஆரம்பத்தில் இருந்தே சிரிப்பு இல்லாத பாத்திரமாக வரும் மாசிலாமணி குழந்தைக்கும் அவருக்குமிடையில் நல்ல வழிகாட்டலும் நல்ல உறவும் வந்த பிறகு சிரிக்கிறார். அதுதான் செய்தி! வேறென்ன? இந்த விரிந்த பார்வையைத் தவிரச் சற்று உள்ளே வந்து பார்க்கும் போது தமிழீழத்தின் பல மனிதர்களுக்கு மாசிலாமணி ஒரு குறியீடாகிறார். அவருடைய பாத்திரவாக்கம் மிகச்சிறப்பாக இருக்கிறது. வடமராட்சி சிவராஜா, பாத்திரத்துக்கு ஈடு கொடுத்து நடிக்கிறார். அவருடைய பேச்சில் வரும் மண்வாசனை (என்னடாம்பி மற்றும் மற்றும் வருத்தக்காறர் போன்றவை) சிறப்பாக இருக்கிறது. அது அந்தப் பாத்திரத்துக்கு மனதில் நிற்கும் ஒரு தனித்தன்மையைக் கொண்டு வருகிறது.

பாத்திரங்கள் எதையும் லட்சிய மயப் படுத்தாமல் இருப்பது இன்னொரு சிறப்பம்சம் எனலாம். எமது அனுதாபம் குழந்தையின் குடும்பத்தின் பக்கமே இருக்கிறது. பிள்ளை பிழை செய்கிறது. பிள்ளை செய்தது பிழை என்பதைத் தந்தை ஒப்புக் கொள்கிறார்; மன்னிப்புக் கேட்கிறார். இழப்பைத்தான் ஈடுசெய்வதாகச் சொல்லுகிறார். ''உன்னாலை முடியாது'' என்று மாசிலாமணி சொல்லும்போதுதான் அவ

ருடைய சுய கௌரவம் பாதிக்கப்பட்டதாக உணர்கிறார். மாசிலாமணிமீதுஎழுந்த கோபம் *Displaced Anger* ஆகக் குழந்தை மேலேயே திரும்புகிறது. தனது நடத்தையால் பிள்ளை ஆபத்தான நிலைக்கு வருகிறதைப் பார்க்கிறபோது ஏற்படும் சுய வெறுப்பு, கழிவிரக்கம் ஆகியவை அவரைக் குடிக்கத் தூண்டுகின்றன. ஒரு சாதாரண மனிதனின் சிக்கலான நடத்தை, உளவியல் கோணத்தில் பார்க்கப்பட்டிருப்பது படத்தின் மற்றொரு 'பிளஸ் பொயிண்டா'க அமைகிறது.

''கோபம் வந்தா அடிப்பீங்க, கவலை வந்தாக் குடிப்பீங்க .... நாங்கள் என்ன செய்யிறது?'' என்று மனைவி கேட்கிறாள். அந்த இடத்தில் தமது உணர்வுகளை எல்லாம் மனதின் ஆழத்தில் புதைத்து, பொறுமைப் என்ற முலாம்பூசி குடும்பத்தை இழுத்துச் செல்லும் எமது பெண்களின் நிலை மிகத் தெளிவாகக் காட்டப்படுகிறது.

ஆண்கள் தமது உணர்வுகளுக்கான வடிகால்களை இலகுவாகத் தேடிக்கொள்ளும்போது, பெண்கள் அதனைப் புதைத்து வைக்கும் அவலத்தை இதைவிட நுணுக்கமாக வேறு எப்படிக் காட்டமுடியும்? தனபாலுடைய பாத்திரம் *Variety* நிறைந்த நடிப்பை வேண்டி நிற்கிறது. சிறப்பாகச் செய்கிறார்.

'கிட்டு பூங்கா'வில் உலா வருகிறபோது குழந்தையின் தாய் ஊதாநிறச் சேலை உடுத்திருக்கிறார். கி. மு. 5ம் நூற்றாண்டில் இருந்த கிரேக்க அரங்கிலேயே ஊதா துன்பத்துக்குரிய (*tragil*) நிறமாகப் பயன்பட்டிருக்கிறது. அகமெம்னன் போர் முடிந்து திரும்பும்போது ஊதாநிற உடை அணிந்த பெண்கள் அவனை வரவேற்கிறார்கள். அது அவனுக்கு வரப்போகும் துன்பத்துக்கு அறிகுறியாகிறது. இங்கேயும்?

மனைவியையும் குழந்தையையும் சைக்கிளில் வைத்து அவன் உழக்கிக் கொண்டு போகிறான். சமநிலைக்கு கஷ்டப்படுவதை நாம் அவதானிக்கிறோம். அது வெறும் சைக்கிள் பயணமாக எமக்குத் தோன்றவில்லை. எமது நாட்டில் இன்று ஒரு குடும்பத்தலைவன் எவ்வளவு சிரமப்பட்டுத் தன் குடும்ப வண்டியை ஓட்டுகிறான். சமநிலையைப் பேண எவ்வளவு சிரமப்படுகிறான் என்பதையும் அது நினைக்க வைக்கிறது.

கடினவேலையும் இன்பமான காட்சிகளும் மாறிமாறிக் காட்டப்படுகிற போது அவன் கஷ்டப்பட்டு உழைத்துத்தன் பிள்ளையைச் சந்தோசமாக வைத்திருக்கிறான் என்பதற்கு மேலாக இன்பமும் துன்பமும் வாழ்வின் தவிர்க்க முடியாத இரு பக்கங்கள் என்ற தத்துவத் தொனியும் இணைந்து தெரிகிறது.

விமானத் தாக்குதலில் பலியான பெற்றோர் இருவரும் பிள்ளை பாடசாலை விட்டு வந்து பார்க்கும் வரை வேறு எவராலும் கவனிக்கப்படாமல் அந்த இடத்தில் கிடப்பது யதார்த்தத்திற்குக் கொஞ்சம் முரண் போலப்படுகிறது.

நல்ல படங்களில் கமெராவும் படத்தொகுப்பும் முக்கியமானவை. மிக நல்ல தயாரிப்பாளர்கள் படத்தொகுப்பு அறைக்குள் பல நாட்களாகவே அடைபட்டுக் கிடப்பார்கள். இங்கே இன்னும் வளர்ச்சிக்கு இடம் இருக்கிறதாயினும் இப்படத்தில் இவ்விரு விடயங்களும் கவனிக்கப்பட்டுள்ளன.

நாங்கள் தயாரித்த முன்னையவீடியோ படங்கள், குறும்படங்களுடன் ஒப்பிடுகையில் எமது மெல்லிய உணர்வுகளைத் தொட்டு வெற்றி பெற்றுள்ள இப்படத்திற்காகத் தயக்கம் எதுவுமின்றிக் கேசவராஜனுக்கும் அவரோடு இணைந்த கலைஞர்களுக்கும் 'சபாஷ்' கூறலாம்!

**- கோகிலா மகேந்திரன்**

□□



# இளையவனின்

# வீடு (சிறுகதைத் தொகுதி)

இது தமிழ்த்தாய் வெளியீட்டகத்தின் உருவாக்கம்

வீடு என்பது வெறுமனே கல்லாலும், மண்ணாலும், மரத்தாலும் சேர்த்துக் கட்டப்பட்ட ஒரு கட்டடம் அல்ல. வீடு என்பது எமது குடும்பம் என்ற அன்புறவின் உயிர்நாடியான வாழ்விடம். குந்தியிருக்க எமக்கென்றொரு இடம் இருக்கின்றது என்ற நிம்மதி இருந்தால் நாம் எமது வாழ்வை ஒருவித நம்பிக்கையுடன் தொடரலாம். இல்லையேல் நாளாந்தம் ஓயாத துன்பமும் துயரமும் தான்.

அன்றாடம் எமது வீட்டுக்குள்ளே ஆயிரம் பிரச்சனைகள், எமக்கென்றொரு சொந்த வீடில்லையே என்ற ஏக்கத்தைச் சுமக்கும் எத்தனையோ இதயங்கள், சொந்த வீடிருந்தும், அந்த சொந்தவீட்டில் சுகமாக வாழமுடியாதபடி எங்கோ எப்படியோ அகதிவாழ்வு வாழும் அவலங்கள். வாயைக்கட்டி, வயித்தைக்கட்டி, கஸ்டப்பட்டு திட்டமிட்டு உருவாக்கிய வீடு கண்முன்னாலேயே தகர்ந்து தரைமட்டமாகிய கோரச்சம்பவங்கள். வீடு வாசலை இழந்து அகதிவாழ்வு வாழும் மக்களுக்கும், அவசர தேவையின் நிமித்தம் வீடு தேவைப்படும் போராளிகளுக்கும் பூட்டி வைத்திருக்கும் வீட்டைப் பாவனைக்கு வழங்க மறுக்கும் சுயநலம் மிக்க மனிதர்கள். வசதியான வீடும், வளமான வாழ்வும் இருந்தும் நாட்டுப்பற்றின் காரணமாக வீட்டைத் துறந்த தியாக உள்ளங்கள். வெளிநாட்டு மோகத்தில் மதிமயங்கித் தவிக்கும் உள்நாட்டில் வாழ்கின்ற ஆயிரமாயிரம் முகங்கள் இவையாவும் நாம் கண்டும், கேட்டும், படித்தும், உணர்ந்தும், அனுபவித்தும் இருக்கின்ற தமிழீழம்சார்ந்த சமூகப் பிரச்சனைகளாக சமூகம் சார் நடைமுறைகளாக உள்ளவை.

போராட்ட சூழ்நிலைகளால் மேற்கூறப்பட்ட பல்வேறு பிரச்சனைகளின் வெவ்வேறு பரிமாணங்களை **'வீடு'** என்ற சிறுகதைத் தொகுதி இனங்காட்டி நிற்கின்றது.

காலத்தின் தேவைகளுக்கமைய இலக்கியத்தின் உருவும், பொருளும் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதற்கமைய ஒரு காலப் பதிவாக, சமூக ஆவணமாக பல்வேறு விடயங்கள் இத்தொகுதியில் இனங்காணப் படுகின்றன. 'வீடு' பெறும் முக்கியத்துவமும் வீட்டைச் சார்ந்த பிரச்சனைகளும்,

வீடு இன்மையால் ஏற்படும் சிக்கல்களும், சொந்த வீட்டின் முக்கியத்துவமும் என்று 'வீடு'- கதைகள் பலவற்றின் உள்ளடக்க மாக முக்கியத்துவம் பெறுவதனை நாம் காணலாம்.

**உறங்கும் கோபங்கள், வீட்டபோவம், ஒரு இமைப்பொழுது, புதியதொரு திசை யிலே, வீடு, தொலைந்துபோன நாட்கள்** போன்றவை வீடு பற்றிய வெவ்வேறு பரி மாணங்களைக் காட்டுகின்ற வேறுவேறான சூழ்நிலையில் படைக்கப்பட்ட சிறுகதை களாகும்.

**ஒருநாள் குறிப்பு** என்ற சிறுகதையும் வீடு சார்ந்த ஒரு வயோதிபரின் மனநிலை யையும், கடமையில் கருத்தூன்றிய ஒரு போராளியின் ஒரு நாள் நகர்வையும் சித் திரிக்கும் ஆக்கமாக அமைய, ஏனையகதை கள் போராளிகளின் தற்கொடைப்பண்பின் மகத்துவத்தையும், காலத்துக்குக்காலம் இராணுவ (இந்திய, இலங்கை) அனர்த் தங்களால் ஏற்பட்ட துயரங்களையும், அகதி என்ற நிலையில் மனித மனம்படும் பாட்டையும், எடுத்தியம்புகின்றன.

தற்போது நாம் எதிர் கொள்ளும் சமூகப் பிரச்சனைகளை ஆசிரியர் தன் னுடைய பார்வையில் எப்படித் தரிசித் தாரோ அவற்றை தனது கண்ணோட்டத் தில், தனக்கேயுரிய பாணியில் அப் பிரச் சனைகளையும் உணர்வுகளையும் எடுத் துணர்த்துவதற்கு பாத்திரப் படைப்புகள் பலவற்றை ஒரு 'வகைமாதிரி' யாகக் காலத் தின் தேவை கருதித் தந்துள்ளார். இவர் சில கதைகளில் பாத்திரத்தைக் காட்டுவ தோடு மட்டுமன்றிப் பாத்திரங்கள் இயங்கு கின்ற முறைமையினால் ஏற்படும் உணர்வு நிலையைச் சித்திரிப்பதிலும் அக்கறை காட்டியுள்ளார்.

'வீடு' என்ற கதையைப் படிக்கும்போது அது கதையாக அல்லாமல் நடந்தேறிய ஒரு உண்மைச் சம்பவம் என்றே நினைக் கத் தோன்றுகிறது. 'வீட்டபோவம்' என்ற கதையில் வீட்டபோவம் என்ற தொடரை அடிக்கடி பயன்படுத்துவதன் மூலம் தான் கூற வந்த விடயத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார்.

''எமக்கென்றொரு நாடு இல்லாத வரையில் எனக்கென்றொரு வீடு இருப்பது சாத்தியமில்லை'' என்ற முடிவோடு நிறை வெய்தும் 'புதியதொரு திசையிலே' கதை யும் ''அடுத்த பொம்மர் வருவதற்கிடை யில் ஆளுக்கொருசோடி உடுப்பாவது எடுக்கவேணும்'' என்று கற்குவியலைக் கிளறும் 'ஒரு இமைப் பொழுதிலே' கதை யும் எம் கண்முன்னே நடந்து முடிந்த கடந்தகால நிதர்சனங்களாகும்.

திருகோணமலை, மலையகம், மட்டக் களப்பு, கிளிநொச்சி, தீவகம், யாழ்ப்பா ணம் போன்ற பிரதேசங்களைக் களமாகக் கொண்டு தனது கதைக்கான கருவை வடிவமைத்து தந்துள்ள **'வீடு'** தொகுதி மேற் கூறப்பட்ட நிறைவுகளோடு காணப்படுகின் றது. எனினும், 'போதனை', 'சற்றே தள்ளி யிரும்பிள்ளாய்', 'முத்திரையிடப்பட்ட உற வுகள்' போன்ற கதைகளில் சிறுகதைக்குரிய உருவ அமைப்பு மேலும் இறுக்கமடைந் திருந்தால் கதைகள் கூடிய கவனத்தைப் பெற்றிருக்கும்.

ஏற்கனவே **'காணி உறுதி'** என்ற சிறு கதைத் தொகுதியைத் தந்த ஆசிரியர் இப் போது வீடு என்ற சிறுகதைத் தொகுதி மூலம் தன்னை மேலும் இனங்காட்டியுள் ளார். 'இந்தச் சிறுவனா இதைச் செய் திருப்பான்' என்று திகைக்கின்ற இன்ஸ் பெக்டரின் வியப்பு இன்று சர்வதேச உல கிலும் ஏற்பட்டுள்ள வியப்பாகவே உள்ளது. போராட்ட வெற்றிகளில் மட்டுமன்றி இலக்கியப் படைப்புகளிலும் தலை சிறந்த படைப்புக்கள் இங்கிருந்துதான் வெளிவர வேண்டும். வெளிவரும் என்ற குரல்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. இந்த குரல் களின் வேண்டுதல்களை நிறைவேற்ற வேண்டிய பாரிய கடமை ஈழத்து இலக்கிய கர்த்தாக்களுக்கு உண்டு. இதில் இளைய வன் அவர்களின் பங்கும் அவசியமான தாகும்.

**செல்வி. கலாநிதி சண்முகநாதபிள்ளை**

□□

தமிழகத்தில் இருந்து வெளிவரும் வணிக வார ஏடான 'குமுதம்' இதழில் வெளியாகியுள்ள விடயம் தொடர்பாக, காங்கேசன்துறையைச் சேர்ந்த வெளிச்சம் வாசகர்கள் திருக்குமாரன், வாசுதேவன் ஆகியோர் எழுதியுள்ள நீண்ட கண்டன மடலின் சில பகுதிகளை ஏனையோரும் அறியும் அவசியம் கருதிப் பிரசுரிக்கிறோம்.

— ஆசிரியர் குழு.

குமுதம் அழகான பூவொன்றின் பெயர். சாக்கடை வடிகாலுக்குச் சந்தனக் கால்வாய் என்று பெயர் வைத்தது போன்று குமுதம் என்ற நாமத்துடன் தமிழ் நாட்டிலிருந்து வாரசஞ்சிகையொன்று வெளிவருகிறது.

இந்தக் குமுதமும், இதையொத்த வகையறாக்களுந்தான் நேற்றுவரை எம்மண்ணை விற்பனைச் சந்தையாக்கின. இங்கு ஆபாச இலக்கிய விபசாரத்தை மிகவும் நேர்த்தியாக நடத்தின. எமது இளைய தலைமுறையின் இதயங்களை நச்சுப்படுத்தின. மனித இச்சைகளின் மலிவுப் பதிப்புகளான இச்சஞ்சிகைகளுக்கு இங்கு தடை விதித்தது சரியே.

சுஜாதா புதிய தமிழ் நடையின் பிரம்மா, நவீன கருத்துக்களை தமிழில்எழுதும் எழுத்துலக விஞ்ஞானி. கணணியிலிருந்து கருப்பை வரை இவருக்குத் தெரியாதது எதுவுமில்லை என்று எல்லோராலும் விதந்துரைக்கப்படும் எழுத்தாளன். இவரே இன்று குமுதத்தின் ஆசிரிய பீடத்தில் அமர்ந்து அரசோச்சுகிறார். இந்த 'எல்லாம் தெரிந்த வல்லோன்' குமுதத்தில் ''அரசு பதில்கள்'' என்ற பகுதியில் வாசகர்களின் கேள்விகளுக்குப் பதிலெழுதி வருகிறார். **சென்ற 05-01-95 குமுதம் இதழில் பிரதாப்சிங் (அரண்ட நல்லூர்)** கேட்ட **''உமக்குத் தமிழ்நாட்டு இளநீர் பிடிக்குமா? கேரளத்து இளநீர் பிடிக்குமா?''** என்ற கேள்விக்கு **''நமக்குப் புடிச்சது யாழ்ப்பாணமுங்க''** என்ற பதிலையும், அதற்குப் பக்கத்தில் பிரசுரித்திருக்கும் படத்தையும் கண்ணுற்று நாம் விக்கி, விதிர் விதித்து விட்டோம். யாழ்ப்பாணப் பெண்களைமட்டுமல்ல... ஒட்டுமொத்தமாக பெண்கள் சமுகத்தையே இதற்கு மேல் எவரும் கேவலப்படுத்த முடியாது. மிகவும் கீழ்த்தரமான காமவிகாரம் கொண்ட ஒரு மனநோயாளியின் வாயில் இருந்து வரக்கூடிய பதிலே சுஜாதாவின் பேனாவில் இருந்து பிறந்திருக்கிறது.

இத்தகைய பிரபல தமிழக எழுத்தாளர்கள் தமிழ்நாட்டின்கோவில் சிலைகளிலும், கொக்கோக புத்தகங்களிலும் வேண்டுமானால் சாறுபிழிந்து தாகம் தீர்த்துக்கொள்ளட்டும். ஆனால் ''மயிலாப்பூர் பட்டு மாமிகளையும்'', ''அக்ரகார அரம்பைகளையும்'' மட்டும் பத்தினிகளாகக் கருதிக்கொண்டு தமிழீழப் பெண்களைத் தென்னை மரங்களாக எண்ணி ''தேங்காய்க் கதை'' எழுதப் புறப்பட்டால் நாங்களதை அனுமதிக்ககூடாது.

தமிழீழப் பெண்களை இப்படிக் கேவலப்படுத்தி எழுதுவதற்கு சுஜாதாவுக்குத் துணிச்சல் வந்தது எப்படி? கேட்பதற்கு எவரும் வரமாட்டார்கள் என்ற நினைப்பு சுஜாதாவுக்கு எப்படி வரலாம்? ரங்கராஜன் என்ற சொந்தப் பெயரையே சுஜாதா என்ற புனிதமான பெண்ணின் பெயருக்குள் புதைத்துக் கொண்டு, பெண்களையே கொச்சைப்படுத்தும் இந்த ''எழுத்துலகப் பிரம்மா''வை நாம் கோபத்துடன் கண்டிக்கின்றோம்.

எம்மண்ணைக் கேவலப்படுத்துபவனை மட்டுமல்ல, இரட்டை அர்த்தத்தில் எமது பெண்களைக் குட்டிக் குட்டிக் குதூகலிப்பவனையும் இந்த மண் மன்னிக்கக் கூடாது. இதை வெறும் எழுத்தாளர் பிரச்சனையாகவோ, எழுத்துப் பிரச்சனையாகவோ நாங்கள் கருதவில்லை. அதற்கு அப்பாலும் இந்தப் பதிலுக்குள் ஒரு ஆழமான அர்த்தம் இருப்பதாகவே நாம் எண்ணுகிறோம்.

அமைதிப் படையென்று இங்கு வந்த இந்திய இராணுவம் எங்கள் பெண்களின் மார்புச் சட்டைக்குள்ளே வெடிகுண்டு தேடிய போது எங்களுக்கு ஏற்பட்ட கோபம் இன்னும் ஆறவில்லை. என்றும் ஆறப்போவதுமில்லை... இதற்கிடையில் ''சுஜாதா'' புதிதாக இளநீர் தேடத் தொடங்கியுள்ளார்.

**'அரசுக்கு' ஒன்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகின்றோம். இது தமிழீழம்......... தமிழ்நாடு அல்ல.........** ☐☐

**விவசாயிகளே...**

**உங்கள் உள்ளூர் உற்பத்திக்கு**
**கேடு விளைவிக்கும்**

பூச்சி, புளுக்கள் அனைத்தையும் ஒரு நொடியில் அழிக்கும்
கிருமி நாசினிகள் — பங்கஸ் கொல்லிகள்

பயிர்களை வளமாக்கும்

உர வகைகள், மருந்து வகைகள்
மற்றும்
அன்றாட பாவனைப் பொருட்கள்
பலசரக்கு சாமான்கள்

அனைத்தையும் நிதான விலையில்
பெற்றுக் கொள்ள

நாடுங்கள்:

**தவமலர் ஸ்ரோர்**

சுன்னாகம் வீதி - புத்தூர் மேற்கு,
புத்தூர்.

உங்கள் வீட்டு வேலைகளில்

பங்கெடுக்கிறது "ஆரணி மில்ஸ்"

சிறுதானியங்களை....

உழுந்து, பயறு மற்றும் மிளகாய் போன்றவற்றை

அரைத்தும் நெல், குற்றியும், உடைத்தும்

அரிசி வகைகள் மாவாக்கியும் தீட்டியும் தருகிறது

நம்பிக்கையுடன் விரையுங்கள்...

ஆரணி மில்ஸ்

இலுப்பையடிச் சந்தி,

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# அபத்தமும் அர்த்தமும்

## 4

பிரம்மஞானி

இரண்டாவது உலகப்போர் முடிவுக்கு வந்தது. இரண்டாவது தடவையாக, உலகத்துமனிதர்கள், தமக்குள் பெரும் போர்செய்து, பெருமளவு இரத்தம் சிந்தி, தமக்குத்தாமே பேரழிவை ஏற்படுத்தி, அந்தப் பெரும் சிதைவுகளிலிருந்து ஒரு புதியஉலக ஒழுங்கை கட்டினார்கள். பூமியை ஆளுவதற்கு ஆசைகொண்ட நாசிச அரக்கன் களத்தில் மடிந்துபோனான். அவனது புதைகுழியிலிருந்து இரு பெரும் வல்லாதிக்க பூதங்கள் பிறப்பு எடுத்தன. புதிய உலக மைப்பு இந்தப் பூதங்களின் கையில் வீழ்ந்தது. இந்த இருபெரும் வல்லாண்மை சக்திகள் மத்தியில் பிடுங்குப்பட்டு, இரண்டாகப் பிளவு கண்டது ஐரோப்பிய கண்டம்.

கிழக்கு ஐரோப்பாவை ரஷ்ய கம்யூனிசம் விழுங்கிக்கொண்டது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாக மாறியது மேற்கு ஐரோப்பா. உலகத்தை உலுப்பிய உலக யுத்தம் முடிந்தபோதும் ஐரோப்பியமனிதனின் அடிமை வாழ்வு முடியவில்லை. அவன் ஒரு சிறையிலிருந்து மீட்கப்பட்டு இன்னொரு சிறைக்குள் தள்ளப்பட்டான்.

யுத்தம் முடிந்த காலகட்டத்தில், அன்றைய ஐரோப்பிய அரசியல் சூழ்நிலையை இப்படித்தான் எடைபோட்டார் சாத்தர். ஐரோப்பிய கண்டத்திற்குள் அவரது பார்வை அன்று முடங்கிக்கிடந்தது.

ஐரோப்பிய மனிதனை வரலாறு இன்னும் விடுதலை செய்யவில்லை. அவனைச் சூழ, நாலாபுறமும் ஆதிக்கச் சுவர்கள் எழுந்து நின்றன. அதன் நடுவே, நகரமுடியாதபடி, அவன் விலங்கிடப்பட்டுக் கிடந்தான். முதலாளியமும் கம்யூனிசமும் ஐரோப்பிய பாட்டாளியை அடிமை கொண்டு நின்றன. முதலாளியம் மனிதத்துவத்திற்கு விரோதமானது. அது மானிடத்தின் இரத்தத்தைக் குடித்துவளர்கிறது. மனிதபடைப்பாக்க சக்தியை பண்டமாக்கி, பணமாக்கி வாழ்கிறது. மனிதத்தின் சாரத்தை பொருளுலகில் புதைத்துவிடுகிறது. கம்யூனிசம் என்ற உன்னத எண்ணக்கரு, ரஷ்ய மண்ணில் வேதாள வடிவம் எடுத்திருக்கிறது. மார்க்சின் சமத்துவ தத்துவம், ஸ்டாலினிச சர்வாதிகாரமாக பிறழ்ச்சி கண்டிருக்கிறது. அது மனித சுதந்திரங்களை ஏப்பம்விட்டு வருகிறது. ரஷ்ய கம்யூனிசத்தையும், அமெரிக்க முதலாளியத்தையும் கடுமையாகச் சாடினார் சாத்தர்.

ஒரு புதிய ஐரோப்பாவை சாத்தர் கனவு கண்டார். ஆதிக்க சக்திகளின் அதிகாரப் பிடியிலிருந்து ஐரோப்பிய சமூகம் விடுதலை பெறவேண்டும். ஒரு சுதந்திரமான, சமத்துவமான, உண்மையான சோசலிச சமூகமாக ஐரோப்பா மாறவேண்டும். ஒரு புதிய வரலாற்றுப் பாதையில், புதிய யுகத்தை நோக்கி ஐரோப்பிய மனிதன் முன்

னேறிச் செல்லவேண்டும். இப்படியான ஒரு இலட்சியக் கனவைக் கண்டார் சாத்தர். உலகப்போர் ஓய்வுகண்ட அன்றைய கால கட்டத்தில், சாத்தரின் அரசியல் ஈடுபாடும், எழுத்தும் இந்த இலட்சியத்தின் அடிப்படையில் அமைந்தது.

தனது புதிய பார்வைக்கு களம் அமைக்க விரும்பிய சாத்தர் நவ யுகம் (*LES TEMPS MODERNES*) என்ற பத்திரிகையை ஆரம்பித்து அதன் ஆசிரியராகப் பணிபுரிந்தார். அத்துடன் 'சர்வதேச புரட்சிகர சனநாயக மக்கள் சபை' என்ற அரசியல் இயக்கத்தையும் ஆரம்பித்தார். சாத்தரின் அரசியல் இயக்கம், கருத்து முரண்பாடு காரணமாக, சொற்ப ஆயுசுடன் மடிந்துவிட்டது. அவரது அரசியல் ஈடுபாட்டிற்கு எழுத்தாற்றல் மட்டும் எஞ்சி நின்றது. புதிய சோசலிசப் பாதையை வேண்டிநின்ற அவரது அரசியற் தத்துவார்த்த எழுத்துகள் மரபுவாதத்தில் மூழ்கிக்கிடந்த பிரஞ்சு கம்யூனிச இயக்கத்திற்கு சினத்தை மூட்டியது.

மிகவும் பலம்வாய்ந்த அரசியற் கட்சியாக, பாட்டாளிவர்க்கத்தின் ஏக பிரதிநிதியாக, பரந்து வளர்ந்து நின்ற பிரஞ்சுக் கம்யூனிச இயக்கம் சாத்தரை ஒரு சித்தாந்த விரோதியாகக் கண்டது. மனிதத்துவத்திற்கு முதன்மை கொடுத்த சாத்தரின் சோசலிச தரிசனத்தை 'அபத்தவாதம்' என்றும் 'பிற்போக்கு வாதம்' என்றும் கிண்டல் செய்தது. சாத்தரும் பதிலுக்கு சொல் அம்புகளை ஏவினார். சோவியத் கம்யூனிசத்தின் கைப்பொம்மைகள் என பிரஞ்சு கம்யூனிஸ்ட்டுகளை சாடினார். சுதந்திரமாகச் சிந்திக்க மறுக்கும் சித்தாந்தக் குருடர்கள் என கம்யூனிச புத்திஜீவிகளை கண்டித்தார். முரண்பாடு முற்றியது. பிரஞ்சு கம்யூனிச அறிவுஜீவிகள் மட்டுமன்றி ரஷ்ய, கிழக்கு ஐரோப்பிய சித்தாந்தவாதிகளும் சாத்தருக்கு எதிராக அணிசேர்ந்தனர். தனி ஒருவனாக நின்று, முழுக்கம்யூனிச உலகத்துடனும் கருத்துப்போர் நடத்தினார் சாத்தர். நாற்பதுகளின் நடுப்பகுதியில் தொடங்கிய இந்தக் கருத்துப்போர் தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள்வரை நீடித்தது. இந்தக் கால கட்டத்தில், அரசியற் தத்துவார்த்தக் கட்டுரைகளை மட்டுமன்றி, அரசியல் ஈடுபாட்டை வலியுறுத்தும் நாவல்களையும் படைத்து, நாடகங்களையும் மேடையேற்றினார்.

மரபுவாத கம்யூனிஸ்ட்டுகளுடன் முரண்பட்டு நின்றபோதும், மார்க்சிய சிந்தனையின் மையக் கருத்துகளை சாத்தர் ஏற்றுக்கொண்டார். கார்ள் மார்க்சின் வரலாற்றுப் பொருளியம் அவரை ஆழமாகப் பற்றிக்கொண்டது.

மார்க்சிய வரலாற்றியல் மானிடத்தின் உண்மைக் கதையை சொல்கிறது. மனித குலத்தின் சமூக வரலாற்றிற்கு உண்மை விளக்கத்தைக் கொடுக்கிறது. மனிதனை மையமாகக் கொண்டு மனித வரலாற்றை தரிசிக்க முனைகிறது. மனித உழைப்பிலிருந்து, அந்த உழைப்பால் எழும் உறவுகளிலிருந்து, அந்த உறவுகளின் பிணைப்பால் பிறக்கும் பொருளிய வாழ்விலிருந்து மனிதனின் கதையைச் சொல்கிறது. மனிதனின் இருண்ட வரலாற்றுக் குகைக்குள் வெளிச்சத்தைக் காட்டினார் மார்க்ஸ். அந்த வெளிச்சத்தில், கற்பித நிழல்கள் கலைந்து போக, மனிதனின் நிஜவுருவம், அவனது உண்மையான வரலாற்று முகம் தெரிந்தது. இந்த வகையில் வரலாற்றுப் பொருளியம் ஒரு புதுமையான கண்டுபிடிப்பு. இந்தத் தத்துவம் மனித சமூக வரலாற்று மெய்யுண்மையை புலப்படுத்தி நிற்கிறது என்றார் சாத்தர். மார்க்சின் மகத்துவம் இது மட்டுமல்ல. அநீதிகள் நிறைந்த மனித உலகத்தை அவர் மாற்ற விரும்பினார். புதியதொரு சமூக ஒழுங்கிற்கு வழிகாட்டினார். மார்க்சின் புதுமையான கருத்துலகம் வேறு; அந்தக் கருத்துகளைப் பிரதிசெய்து கட்டப்பட்டிருக்கும் கம்யூனிச உலகம் வேறு. இந்தக் கம்யூனிச உலகம் மனிதத்துவத்திற்கு சமாதிகட்டிவிட்டது என்றார் சாத்தர்.

கம்யூனிச உலகம் மனிதத்துவத்தை இழந்து நிற்கிறது. தனிமனித நிதர்சனத்தை மறுதலித்து நிற்கிறது. மனிதனின் அக நிலை வாழ்வை அங்கீகரிக்க மறுக்கிறது. இந்த அடிப்படையான குறைபாடு காரண மாகவே இன்று கம்யூனிச உலகம் மனித முகமற்ற குரூபியாக மாறியிருக்கிறது என் பது சாத்தரின் வாதம்.

மனிதன் பற்றிய ஒரு புரட்சிகரமான பார்வையில் சோசலிச சமூகம் நிர்மாணிக் கப்படவேண்டும். மனிதத்துவத்தை மேம் பாடு செய்வதே சோசலிசத்தின் உண்மை யான இலட்சியமாக அமையவேண்டும். இந்தக் கருத்தை மையமாகக் கொண்டு. 1946ல் **பொருளியமும் புரட்சியும்** (*MATERIALISM AND REVOLUTION*) என்ற நூலை வெளியிட்டார் சாத்தர். இந்தப் படைப்பில் மனிதாபிமான சோசலிசத்தை அவர் வலியுறுத்தினார்.

ஒரு புதிய மனிதனை, சுதந்திரமான மனிதனை, முழு மனிதனை உருவாக்கம் செய்வதே சோசலிசப் புரட்சியின் குறிக் கோளாக இருக்கவேண்டும். பாட்டாளி வர்க்க விடுதலை என்ற வரையறைக்குள் சோசலிசத்தின் எல்லைக் கோடுகளை நிர் ணயிக்கக்கூடாது. வர்க்க முரண்பாடுகள் நீங்கிய சமூகத்தில், சகல மனிதர்களும் சமத்துவமாக, சுதந்திரமாக வாழவேண் டும். சகல மனித உறவுகளும் ஒத்திசை வாக அமையவேண்டும். அதிகார உறவுகள் அற்றுப்போகவேண்டும். ஒருவனது சுதந்தி ரத்தையும் தனித்துவத்தையும் மற்றவன் மதிக்கவேண்டும். தனிமனிதனது அகவாழ் வும், ஆற்றலும், ஆளுமையும் தளைத் தோங்க வழிசெய்யவேண்டும். சோசலிசப் புரட்சியானது இந்தக் குறிக்கோள்களைக் கொண்டதாக அமையுமானால், ஒரு உன் னதமான சமத்துவ சமூகம் உருவாகும். அது மனிதத்துவத்தை மேம்பாடு செய்யும் என எழுதினார் சாத்தர்.

மனிதத்துவத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, மனிதாபிமான தர்மத்தை வேண்டி, சாத்தர் வலியுறுத்திய சோசலிச தத்துவத்தை கம்யூனிச உலகம் நிராகரித் தது. முதலாளிய அறநெறியை (*BOURGEOIS ETHIC*) பிரதிபலிக்கும் இருப்பிய கற் பனாவாதக் கருத்துகளை 'விஞ்ஞான சோச லிச சிந்தனையில்' திணிக்க முயல்கிறார் எனப் பிரஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி சாத்த ரைக் கண்டித்தது.

இருப்பிய தத்துவத்தின் அடிப்படை களைப் புரியாது, அதனைப் பிற்போக்கு வாதம் என்றும் அகவயமான கருத்தியக் கோட்பாடு என்றும் (*SUBJECTIVE IDEALISM*) கம்யூனிஸ்ட்டுகள் சித்தரிக்க முனை வது சிறுபிள்ளைத்தனமானது என்றார் சாத்தர். இந்த விமர்சனங்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் **இருப்பியமும் மனிதத் துவமும்** (*EXISTENTIALISM AND HUMANISM*) என்ற தலைப்பில் அவர் நிகழ்த் திய சொற்பொழிவு, 1946ல் சிறு நூலாக வெளிவந்தது.

இந்தச் சிறிய நூலில் இருப்பிய தத் துவத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை விளக்க முனைகிறார் சாத்தர்.

இருத்தலிருந்துதான் ஒருவனது வாழ்வு தொடங்குகிறது. முதலில் மனிதன் இருப்புக் கொள்கிறான். அந்த இருப்பு நிலையிலி ருந்து சுயவிழிப்புக் கொள்கிறான். உல கத்தை அறிகிறான். உலகத்தோடு உறவு கள் கொள்கிறான். அந்த உலகானுபவத் திலிருந்து தன்னைத் தானே உருவாக்கிக் கொள்கிறான். மனிதமாக, மனித அக மாக, சுயமாக, ஆளுமையாக, 'நானாக' உருவாக்கம்பெறும் மனித இயல்பை மனி தனே படைக்கிறான். இருப்பே எல்லாவற் றிற்கும் முன்நிலையானது, அடிப்படையா னது. இருப்பிலிருந்துதான் மனித இயல்பு தோன்றுகிறது. இதுதான் இருப்பியத்தின் அடிப்படைத் தத்துவம் என்கிறார் சாத் தர்.

மனிதர்களுக்குப் பொதுவான பண்பு என்று எதுவுமில்லை. தெய்வமோ, விதி

யோ, மனிதனுக்கு அப்பாலான மறுவுலக சக்திகளோ, மனிதத்தைப் படைக்கவில்லை. மனிதனே தனது சித்தத்தால், செயலால், தன்னைத் தானே படைத்துக் கொள்கிறான்.

தனிமனிதன் என்பவன் சமூகப் பெரு வெள்ளத்தில் அள்ளுப்பட்டுச்செல்லும் நிலையற்ற நீர்க்குமிழி அல்ல. அன்றி அவன் ஒரு உணர்வற்ற, உயிரற்ற அசைவற்ற சடப்பொருளுமல்ல. மனிதன் என்பவன் வாழ்வுலகின் பேருண்மை. இருப்பியக்கத்தின் மையம். அவன் சுயவுணர்வுடன் சீவிப்பவன். சிந்திப்பவன். சுயமாக முடிவுகள் எடுப்பவன். விருப்புக்கேற்ற தெரிவுகளைச் செய்பவன். எதிர்காலத்தை நெறிப்படுத்தி வாழ்பவன். பொறுப்புணர்வுள்ளவன். மற்றவர்களுக்கும் பொறுப்பானவன். தனக்கு கிட்டிய வாழ்ப்புகளைக்கொண்டு, தனது சித்தத்திற்கு ஏற்றவாறு தன்னை உருவாக்கிக்கொள்பவன். அவனது ஒட்டுமொத்தமான செயற்பாடுகளே அவனது தனித்துவத்தையும், சுயத்தையும், வாழ்நிலையையும் நிர்ணயித்து விடுகிறது. ஒரு தனிமனிதனானவன் மானிடத்தின் பொதுப்படிமம். அந்தத் தனிமனிதன் தன்னை உருவாக்கம் செய்யும்போது மானிடமும் உருவாக்கம் பெறுகிறது.

பொருளியத்திற்கு முதன்மை கொடுத்து மனிதனது அகவயமாக வாழ்வை மார்க்சீயம் புறக்கணிப்பது தவறு என்கிறார் சாத்தர். மனிதன் அகநிலையில் வாழ்பவன். மனித உறவுகளுக்கு எல்லாம் அகநிலை தான் ஆதாரம். எனக்கும் மற்றவனுக்கும் ஏற்படும் உறவு அகவயமானது. அகநிலையில்தான் நான் மற்றவனை தெரிந்துகொள்கிறேன், புரிந்துகொள்கிறேன், உறவாடிக் கொள்கிறேன். அகநிலை உறவுகளே மனித உறவாக, சமூக உறவாக, கூட்டுறவாக, பரிணமிக்கிறது. அகநிலையில்தான் தனிமனிதன் ஒருவன் சமூக உலகில் சங்கமித்துக் கொள்கிறான். ''மனித உலகத்தைத் தவிர, வேறு உலகம் எதுவுமில்லை. அந்த மனித உலகம் அகவயமானது'' என்கிறார் சாத்தர்.

மனிதன் தனக்காக வாழாமல், தன் நலனுக்காக வாழாமல், தனக்கு அப்பால், தனது சுயத்திற்கு அப்பால், மற்றவர்களுக்காக, மற்றவர்களின் நலனுக்காக, மானிடத்தின் நல்வாழ்விற்காக, தன்னை அர்ப்பணித்து வாழும் மாண்பினை மனிதத்துவம் என்கிறார் சாத்தர். தன்னை விஞ்சி வாழ்பவன், சுயத்தின் எல்லைகளைக் கடந்து மற்றவர்களுக்காக வாழ்பவன், மானிடத்தின் உயிர்ச்சிக்காக வாழ்பவன், உண்மையான மனிதனாக வாழ்கிறான். மனிதத்துவம் அவனிடம் நிறைவு பெறுகிறது. இதுதான் இருப்பியம் வேண்டிநிற்கும் மனிதாபிமானம் என்கிறார் சாத்தர்.

மனிதத்துவத்திற்கு முதன்மைகொடுத்த சாத்தரின் இருப்பியத்தை பிரஞ்சு கம்யூனிச உலகம் ஜீரணிக்க மறுத்தது. இருப்பியத்தில் இழையோடும் தனிமனித தரிசனம் மார்க்சிய சமூகவியலுக்கு முரணானதென கம்யூனிஸ்ட்டுகள் வாதிட்டனர். இந்த அடிப்படை முரண்பாடு காரணமாக, பிரஞ்சு கம்யூனிசக் கட்சியில் இணைந்து செயற்பட சாத்தர் மறுத்தார்.

சோசலிசப் புரட்சிவாதி என்ற ரீதியிலும் அரசியல் ஈடுபாடுடைய இலக்கியவாதி என்ற ரீதியிலும், ஒடுக்கப்படும் மக்களுடன், பாட்டாளி வர்க்கத்துடன் அணி சேர்ந்து நிற்க சாத்தர் ஆவல் கொண்டார். அந்த மக்களுக்காக எழுதவும் குரல் கொடுக்கவும் விரும்பினார். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி அதற்கு முட்டுக்கட்டையாக நின்றது. இதுபற்றி சாத்தர் குறிப்பிடும்பொழுது ''நாம் எந்த மக்களுக்காக குரல்கொடுக்க விரும்புகிறோமோ அந்த மக்கள், எம் நாட்டு மக்கள் ஒரு இரும்புத் திரையால் எம்மிலிருந்து பிரிந்து, அந்நியப்பட்டு நிற்கிறார்கள். எமது எண்ணங்கள். நாம் சொல்லவிரும்பும் கருத்துக்கள் அவர்களை எட்டப்போவதில்லை. தொழிலாள வர்க்கத்தின் பெரும் பகுதி ஒரு கட்சிய மைப்பிற்குள் கட்டுண்டு கிடக்கிறது. ஒரு பிரச்சார வலைக்குள் சிக்குப்பட்டு கிடக்கி

றது. கதவுகளும் சன்னல்களும் இல்லாத ஒரு மூடப்பட்ட சமூகமாக இந்த வர்க்கம் வாழ்கிறது. இவர்களை அணுகுவதற்கு ஒரேயொரு வழியுண்டு. ஒரு ஒடுங்கிய பாதையுண்டு. அதுதான் கம்யூனிஸ்ட் கட்சி'' என்று எழுதினார்.

இந்தக் கம்யூனிஸ்ட் கட்சி பழமையில் புதைந்து கிடக்கிறது. மரபுவாத சித்தாந்தத்தில் மூழ்கிக் கிடக்கிறது. தவிர்க்கமுடியாத வரலாற்று விதிகளில் நம்பிக்கை வைத்திருக்கிறது. பொருளிய நிர்ணய சக்திகளை ஏற்றுக்கொள்கிறது. சுயசிந்தனைக்கு வரம்புகளை விதிக்கிறது. மனிதாபிமான அரசியலை மறுக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, சோவியத் சர்வாதிகாரத்திற்கு முண்டு கொடுக்கிறது. அதன் அழுத்தத்திற்குப் பணிந்து பொம்மலாட்டம் ஆடுகிறது. இப்படியான ஒரு கட்சியில் இணைந்துகொண்டு இலக்கியக் கலையில் ஈடுபடமுடியாது என்ற முடிவுக்கு வந்தார் சாத்தர்.

அன்றைய காலப்பகுதியில், ஸ்டாலினிச ஆட்சியை எதிர்த்த 'தலைமறைவு எழுத்துக்கள்' ரஷ்ய பாதாள உலகிலிருந்து ஐரோப்பாவுக்கு கடத்திவரப்பட்டது. இரும்புச் சுவர்களுக்குப் பின்னால் மௌனமாகிப்போன மனிதர்களின் பெருமூச்சுகள் வெளியுலகிற்கு கேட்கத் தொடங்கியது. கம்யூனிசத்திற்கு எதிராகப் போர் தொடுத்து நின்ற சாத்தருக்கு புதிய ஏவுகணைகள் கிடைத்தன.

ஸ்டாலினிச ரஷ்யா ஒரு நரக உலகம். இரகசியப் பொலீஸ் பேய்கள் ஆட்சிபுரியும் இராட்சியம். அங்கு, இரவோடு இரவாக மனிதர்கள் இல்லாமல் போகிறார்கள். புதைகுழிகளின் இருளுக்குள் மனித சுதந்திரங்கள் மௌனித்து விடுகின்றன. தனி மனித அடையாளங்கள் தடயமெதுவுமின்றி அழிக்கப்படுகிறது. சர்ச்சைக்குரிய கருத்துகள் சமாதிக் கற்களுக்குள் முடங்கிவிடுகின்றன. நகரத்துச் சிறைகள் நிரம்பி வழிய, பாலைவன பனிமண்டலங்கள் கூட்டு விவசாயச் சிறை கூடங்களாக மாற்றப்படுகிறது. சைபீரிய பனிமண்டலம் ஒரு பிரமாண்டமான வதைமுகாம். இங்கு உயிரோடு உறைந்துபோன மனிதர்களை எண்ணிக்கையில் சொல்லமுடியாது. சித்தத் தெளிவோடு சிந்தித்தவர்கள் பைத்தியக்கார விடுதிகளில் தள்ளப்படுகிறார்கள். அங்கு அவர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் நடக்கிறது. அதிர்ச்சியால் தெளிவு பெறாதவர்களுக்கு மூளைய அறுவைச் சிகிச்சையும் நடக்கிறது

ரஷ்ய கம்யூனிசத்தின் அசிங்கமான முகத்தை அம்பலப்படுத்தினார் சாத்தர். அந்த அதர்ம ஆட்சிக்கு முண்டுகொடுத்து நின்ற ஐரோப்பிய கம்யூனிஸ்டுக்களையும் அவர் வன்மையாகக் கண்டித்தார். சாத்தரின் குற்றப்பத்திரிகை கம்யூனிஸ்டுகளுக்கு கடும் சினத்தை ஏற்படுத்தியது. பதிலுக்கு சாத்தரை அவர்கள் மிகவும் கீழ்த்தரமாகத் தாக்கினர். வரலாற்றுக் குப்பைத்தொட்டியில் கிடந்தபடி 'குமட்டும் இலக்கியம்' படைப்பவர் என பிரஞ்சு கம்யூனிச புத்திஜீவி ஒருவர் ஆத்திரத்தைக் கொட்டினார். அமெரிக்க புலனாய்வுத்துறையின் முகவர் என்றும், 'முப்பது வெள்ளிக் காசுக்கு தன்மானத்தை விற்ற யூதாஸ்' என்றும் பிரபல ரஷ்ய எழுத்தாளர் ஒருவர் சாத்தரைச் சாடினார். வாதப்பிரதிவாதங்கள் வலுத்தது. இந்தக் காலகட்டத்தில், கம்யூனிஸ உலகால் மிகவும் வெறுக்கப்பட்ட மனிதராக, எல்லா முனைகளிலிருந்தும் கண்டனக் குரல்களை சாத்தர் எதிர்கொண்டதாக சிமோன் டு போவா SIMONE DE BEAUVOIR) சாத்தரின் வாழ்க்கைக் குறிப்பில் எழுதுகிறார்.

1948ல் பாரிஸில் மேடையேறிய, சாத்தரின் அழுக்கான கரங்கள் (DIRTY HANDS) என்ற நாடகம் பிரஞ்சு அரசியல் உலகில் ஒரு சூறாவளியைக் கிளப்பியது. இந்த நாடகம், வைதீக கம்யூனிஸ்ட்டுகளின் அரசியல் நடைமுறையை கடுமையாக விமர்சித்தது.

கதாநாயகன் ஹோடரர் ஒரு கண்ணியமான கம்யூனிஸ்ட், நேர்மையுள்ளவன். மக்கள் நேயமுடையவன். சமநீதி சமூகத்தை இலட்சியமாக வரித்துக்கொண்டவன். ஒரு எதார்த்தவாதி. மார்க்சிய அறிவுஜீவி, சமூக உலகத்து முரண்களை ஆழமாக ஆய்வு செய்து, அறிவியல் அடிப்படையில் சமூகப் பிரச்சனைகளை அணுக விரும்புபவன். கட்சியில் மிகவும் பிரபல்யமானவன். கட்சித் தொண்டர்களால் பெரிதும் மதிக்கப்படுபவன்.

ஹோடரருக்கு எதிராக கட்சிக்குள் ஒரு அணி செயற்படுகிறது. லூயி, ஒல்கஎனப்படும் இரு பாத்திரங்கள் இந்த அணியின் தலைவர்கள். இவர்கள் பழமைவாதிகள், மரபுவாதிகள். புதிய அணுகுமுறைகளை எதிர்ப்பவர்கள். சோவியத் கம்யூனிசத்தை வழிபடுபவர்கள். சோவியத்தின் கைப்பொம்மைகள். இவர்கள் கதாநாயகன் ஹோகடரரைகொலைசெய்யத்திட்டம் தீட்டுகின்றனர். கட்சியில் புதிதாக இணைந்திருந்த ஹூகோ எனப்படும் ஒரு இளைஞனை இந்தக் கொலைக்கு தூண்டிவருகின்றனர்.

ஹூகோ இலட்சியமற்றவன். பொறுப்புணர்வற்றவன். ஒரு பணக்கார குடும்பத்தை பின்னணியாகக் கொண்டவன். தனக்கென ஒரு தனித்துவத்தைத் தேடி கட்சியில் இணைந்தவன். கொலைச் சதிக்கு சம்மதிக்கிறான். கட்சியில் முக்கியத்துவம் பெற கொலைச் செயலை ஒரு வாய்ப்பாக கருதுகிறான். கொலை நோக்குடன் கதாநாயகனை எதிர்கொள்கிறான். தனது கொலையாளியென நன்கு தெரிந்தும் ஹோடரர்அவனை அன்புடன் அரவணைத்துக் கொள்கிறார். தன்னைப்பற்றிச் சொல்கிறார். தனது குறிக்கோள் பற்றிக் கூறுகிறார். கொலையாளியின் மனிதத்துவத்தை தொட்டுவிடமுனைகிறார். ஆனால் அவனிடம் மனிதத்துவம் செத்துப்போய்க் கிடந்தது. ஈவிரக்கம் காட்டாது அவன் கதாநாயகனை கொலைசெய்துவிடுகிறான். கொலைநடந்து முடிந்ததும், சதிகாரர்களின்கையாட்கள் வருகிறார்கள். ஹூகோ மீது கொலைப்பழி சுமத்தி அவனைக் கைது செய்ய முயற்சிக்கிறார்கள். அப்பொழுது தான் அவனுக்கு வெளிச்சம் ஏற்பட்டது. சதியின் சூத்திரம் புரிந்தது. அழகான மனிதன் ஒருவனை அநியாயமாக அழித்து விட்டதாக உணர்கிறான். இனிச் செய்வதற்கு ஒன்றுமில்லை. தான் தேடியலைந்த தனித்துவத்தை அழித்து விட முடிவு செய்கிறான். தற்கொலை செய்து கொள்கிறான். ஹோடரரின் மறைவின் பின்னர், அவரைக் கொலை செய்யச் சதி செய்த கட்சித் தலைமை அவரை தியாகியாகப் போற்றியது. அந்தப் புகழஞ்சலிக்குள் அவரது வரலாற்றைப் புதைத்து விடுகிறது.

மரபுவரை கம்யூனிசம் மனிதாபிமானத்தை கொலை செய்து விட்டது என்பது தான் நாடகத்தின் கருப்பொருள். சாத்தரின்தத்துவம், மிகவும்நுட்பமாக, உணர்வுபூர்வமாக கலைவடிவத்தில் சொல்லப்பட்டது. நாடகத்திற்கு ஒருபுறம் பெரும் வரவேற்பும், மறுபுறம் பெரும் கண்டனமும் கிடைத்தது. ஐரோப்பிய முதலாளிய பத்திரிகைகள் நாடகத்தைப் புகழ்ந்துரைத்தன. கம்யூனிஸ்ட்டுகள் பகிஸ்கரித்தனர். பொலீஸ் பாதுகாப்புடன் 'அழுக்கான கரங்கள்' வெற்றிகரமாக மேடைகளில் ஏறியது.

1953ம் ஆண்டு ஸ்டாலின் காலமானார். கம்யூனிச உலகம்மீது கவிந்திருந்த இருண்ட மேகம் அகன்றுவிட்டதாக சாத்தர் எண்ணினார். சர்வாதிகாரத்தின் இரும்புக்கரங்களிலிருந்து விடுபட்ட சோவியத் நாடு சனநாயக சோசலிச பாதையில் நடைபோடும் என அவர் நம்பினார். இந்தப் புதிய நம்பிக்கை அவரது சிந்தனையிலும் செயலிலும் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. கம்யூனிஸ்ட்டுகளுக்கு நேசக்கரம் நீட்டினார். அவர்களும் அதைப் பற்றிக்கொண்டனர். கருத்துச் சமர்கள்முடிவுக்குவந்தன. 1954ல் சோவியத் யூனியன், சீனா உட்பட கம்யூனிச நாடுகளுக்கு ஒரு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டார் சாத்தர். தனித்துவமான, முற்போக்கான ஒரு மார்க்சிய

சிந்தனையாளராக கம்யூனிச உலகம் சாத்தரை ஏற்றுக்கொண்டது. பிரஞ்சு கம்யூனிச இயக்கத்தின் நண்பராக, ஆதரவாளராக சாத்தர் செயற்பட்டார். உலகப் பிரபல்யம் பெற்ற ஒரு தத்துவாசிரியருடன் பிணக்குப்பட்டு நிற்காமல், அவரைத் தமது அணியில் இணைத்துக்கொண்டதையிட்டு கம்யூனிஸ்ட்டுகள் திருப்திகொண்டனர். ஆயினும் இந்த நட்புறவு நீண்டகாலம் நீடிக்கவில்லை. 1956ல் சோவியத் யூனியன் ஹங்கேரிமீது படையெடுத்தது. ஹங்கேரிய எதிர்ப்பியக்கம் ஈவிரக்கமின்றி நசுக்கப்பட்டது. சாத்தரின் நம்பிக்கை இடிந்து போயிற்று. அவர் சோவியத் யூனியனை வன்மையாகச் சாடினார். மனித குலத்திற்கு எதிரான மாபெரும் குற்றம் எனக் கண்டனக் குரல் எழுப்பினார். மௌனத்திற்குள் மனச்சாட்சியை புதைத்து நின்ற பிரஞ்சு கம்யூனிச இயக்கத்தையும் அவர் கண்டித்தார். கட்சியுடன் உறவுகளையும் துண்டித்துக் கொண்டார். ஆயினும் அவர் மீண்டும் கருத்துப்போரை தொடங்க விரும்பவில்லை. கம்யூனிச உலகம், வரலாற்றுப் பள்ளங்களில் விழுந்து, எழுந்து, நிமிர்ந்து, நடக்கும் என்ற ஒரு எதிர்பார்ப்பும் அவரிடம் இருக்கத்தான் செய்தது.

ஐம்பதுகளில் படைப்பிலக்கியத்துடன் நின்றுவிடாமல், மூன்றாம் உலகத்து மக்களுக்காகவும் குரல்கொடுத்தார் சாத்தர். பிரஞ்சு காலனித்துவத்திற்கு எதிராக நிகழ்ந்த வியட்னாமிய, அல்ஜீரிய விடுதலைப் போராட்டங்களையும் ஆதரித்தார். அல்ஜீரிய விடுதலை இயக்கத்திற்கு மறைமுகமாக உதவிகளைச் செய்தார். பிரஞ்சுக் காலனிய கொடுமைகளை அம்பலப்படுத்தினார். அல்ஜீரிய மக்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களையும் முன்நின்று நடத்தினார். இதனால் பிரஞ்சு ஆட்சியாளர்கள் அவரைத் தேச விரோதியாகக் கண்டனர். கொலை முயற்சிகளும் நடந்தன. பாரிஸிலுள்ள அவரது வாசத்தலம் குண்டுவெடிப்புகளுக்கும் இலக்காகியது. உலக சமாதான இயக்கத்திற்கு தலைமைதாங்கி நின்றதால் அவரைக் கைதுசெய்து சிறையில் தள்ளிவிட பிரஞ்சு அரசு துணியவில்லை.

மேற்குலக காலனித்துவத்திற்கு எதிராகப் போர் தொடுத்து நிற்கும் உலகப் புரட்சி இயக்கங்களை சாத்தர் ஆதரித்தார். மேற்குலக வல்லரசுகளை மட்டுமன்றி, மேற்குலக மக்களையும் 'காலனித்துவ சுரண்டல்காரர்கள்' என வர்ணித்தார். ஐரோப்பிய மனிதன் ஒவ்வொருவனதும் அந்தரங்க ஆன்மாவினுள் காலனித்துவப் பிசாசு குடிகொண்டிருக்கிறது என அவர் எழுதியது ஐரோப்பியருக்கு அதிர்ச்சியைக்கொடுத்தது.

பிராங்ஸ் பனன் எழுதிய **'பூமியின் இழிநிலைப்பட்டோர்'** *(WRETCHED OF-THE EARTH)* என்ற நூலுக்கு அவர் எழுதிய அறிமுகக் கட்டுரை மிகவும் பிரபல்யமானது. அதில், காலனித்துவத்தின் முகமூடியை கிழித்துக்காட்டினார்.

பூமியின் முகத்தை காலனித்துவம் சிதைத்துவிட்டிருக்கிறது. தேசங்களைப் பிரித்து, சமூகங்களை உடைத்து, பண்பாடுகளை சீர்குலைத்துவிட்டிருக்கிறது. ஒன்றுபட்டுவாழ்ந்த சுதேசிய மக்களை வர்க்கங்களாகப் பிளவுபடுத்தி, நீங்காத முரண்களைத் தோற்றுவித்திருக்கிறது. மேற்குலக மனிதர்கள் எல்லாருமே காலனித்துவ சுரண்டலால் இலாபமடைந்திருக்கிறார்கள். இந்த வகையில், மேற்குலக மனிதர்கள் எல்லாருமே காலனித்துவவாதிகள். காலனித்துவம் புரிந்துவரும் பொல்லாத பாவங்களுக்கு எல்லாருமே பொறுப்பாளிகள். ஒடுக்கப்படும் மனிதர்களின் ஆத்திரமும், ஆவேசமும், ஆழமான வெறுப்புணர்வும் வன்முறைப் புயலாகக் கிளம்பும். ஐரோப்பியனுக்கு எதிராக வன்முறையைக் கையாண்டே அடக்கப்படுபவன் தனது மனிதத்துவத்தை நிலைநாட்டிக்கொள்வான். இது தவிர்க்கமுடியாத வரலாற்று நிர்ப்பந்தம். ''முன்பு, கடந்த காலத்தில், நாம் வரலாறு படைத்தோம். இனி எமக்காக வரலாறு படைக்கப்படும்.'' என்று எழுதினார் சாத்தர்.

1964ம் ஆண்டு, இலக்கியத்திற்கான நோபல் பரிசு சாத்தருக்கு கிட்டியது. அந்தப் பரிசை ஏற்றுக்கொள்ள அவர் மறுத்தார். மேற்குலகத்தின் நலனைப்பேணும் ஒருமுதலாளிய நிறுவனத்திடமிருந்து 'கலாச்சாரப் பிரமுகர்' என்ற பட்டத்தைச் சூட்டிக்கொள்ள தாம் விரும்பவில்லை என அவர் பகிரங்கமாக அறிவித்தார். ''அல்ஜீரிய நாடு விடுதலை பெறுவதற்கு முன்னராக அல்ஜீரியபோராட்டத்தில் நான் தீவிரமாக ஈடுபட்ட காலத்தில் இந்தப் பரிசு எனக்கு வழங்கப்பட்டிருந்தால் நான் அதை ஏற்றுக் கொண்டிருப்பேன். அது எனக்குக் கிடைத்த தனிப்பட்ட மதிப்பாக அல்லாமல், அல்ஜீரிய சுதந்திரப் போராளிகளுக்கு கிடைத்த கௌரவமாக அதனைக் கருதியிருப்பேன்.'' என்று குறிப்பிட்டார் சாத்தர்.

(தொடரும்)

(அடுத்த இதழில், சாத்தரின் தனிமனித சமூகதத்துவமும் மார்க்சியமும் என்றபொருள் பற்றி எழுதுகிறார் பிரம்மஞானி) □□

எல்லாவகை வர்ணப் ''பெயின்ற்'' களும்
சஞ்சீவியில் கிடைக்கின்றன...

கட்டடங்கள்

விளம்பரபெயர்ப் பலகைகள்

ஓவியங்கள்

எல்லாவற்றிற்கும்

கட்டடப் பொருட்கள் பெயின்ற் வகைகள்

மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

சஞ்சீவி

சேர். பொன். இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

புதுப் புது டிசைன்களில்

தையல் வேலைகள்

பழமை பேணும்

கைத்தறி புடவைகள்

உங்களுக்கும் எங்களுக்கும் எல்லோருக்கும்

ஏற்ற நவீன ரக பட்டுப் பிடவைகள்

சூட்டிங், சேட்டிங் வகைகள்

அனைத்தையும் ஒரே இடத்தில்

தெரிவு செய்யுங்கள்.

விபரங்கட்கு:-

# கணேசன் சென்ரர்

தாவடி வடக்கு, கொக்குவில்.

- நம்பிக்கை!
- நாணயம்!!
- உத்தரவாதம்!!!

● இவை அனைத்தும்
**நிறைந்த சேவை**

○ இன்று...
தமிழீழத்தில் இருந்து
சிறீலங்கா வரை
விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**உங்கள் ஏற்றுமதி இறக்குமதி பொருட்கள்
அனைத்தையும் செவ்வனே நிறைவு செய்ய**

நாடுங்கள்:-

# அம்மன் ரான்ஸ்போட்ஸ் சேவிஸ்

ஏழாலை தெற்கு, ஏழாலை.

உரிமையாளர்:

**து. செல்வரத்தினம்**

(கற்கண்டு)

ஏழாலை தெற்கு.